# புதிய பரிமாணம்

(தனிச் சுற்றுக்கு மட்டும்)
ஜனவரி-மார்ச் 2025



இந்தியா என் சுதந்தரபாகம்!

இந்தியர் அனைவரும் எம் மக்கள்!!

இந்தியர் வளம்பெற்றிட வாழ்ந்திடுவேன்!!!

'அனைவருக்கும் கிறிஸ்து ஊழியங்கள்'




# இந்தியா என் சுதந்தரபாகம்

**உங்கள் சுதந்தரபாகமான கானான் தேசத்தை**
**உனக்குத் தருவேன்.** சங். 105:11

கிறிஸ்துவுக்குள் பிரிய புதிய பரிமாண நேயர்களுக்கும்,
அனைவருக்கும் கிறிஸ்து ஊழியங்களின் பங்காளர்களுக்கும்,
எனது இதயம் நிறைந்த நலமிகு புத்தாண்டு 2025–ற்கான வாழ்த்துக்கள்.

5.12.2024 வியாழக்கிழமை அன்று அனைவருக்கும் கிறிஸ்து ஊழியங்களின் தலைமைச் செயலகத்தில் நடந்த உபவாச ஜெபத்தில் மேலே அச்சிட்டிருக்கும் வசனம் சங். 105:11ஐ நான் வாசித்தபோது என் கண்கள் அதிலேயே குத்திட்டு நின்றது. இதயம் விம்மியது; கண்களிலிருந்து கண்ணீர் சிந்தியது; சத்தமிட்டு அழத்தொடங்கினேன். சற்று நேரத்தில் அது ஆனந்த களிப்பாக மாறியது; அத்துடன் ஆனந்தக் கண்ணீரும் கொப்பளித்தது. ஏனெனில் “உங்கள் சுதந்தரபாகமான இந்திய தேசத்தை உனக்குத் தருவேன்” எனும் ஆவியானவரின் மெல்லிய குரல் என் இதயத்தில் ஒலித்தது.

## தாமதிக்கலாம், ஆனால் தவறாது

நான் மாறுத்தரமாக, ஆண்டவரே இது எப்போது நிறைவேறும், உமது சீடர் பரி. தோமா என் தேசம் வந்து ஈராயிரம் ஆண்டுகளாயிற்றே; மிஷனரி சீகன்பால்க் தரங்கம் பாடியில் கால் மிதித்து 318 வருடங்கள் கழிந்து விட்டதே; பல்கலை வித்தகர் வில்லியம் கேரி வங்கக் கடற்கரையில் கரையிறங்கி 2775 மாதங்கள் உருண்டோடி விட்டதே? எனது சந்ததி என் பொறுப்பா

யிற்றே, இப்போது எனக்கும் வயது 75 முற்றுப்பெற்று விட்டதே! இன்னும் கோடாகோடியாய் என் தேசத்தவர் உம்மை அறியவில்லையே; என்றைக்கு எங்கள் சுதந்தர பாகமாகிய இந்திய தேசத்தை நாங்கள் சுதந்தரிப்போம்? இப்படி ஏராளமான உணர்வலைகள் இடைவிடாமல் எழுந்தன. அலைவட்டம் மறுகரை தொடும்வரை விரிந்துசென்றது. தடாகத்தின் சுற்றளவினை தொட்டுத்தானே திரும்பும்.

## உடன்படிக்கையில் உண்மையுள்ளவர்

அப்போதுதான் வசனங்கள் 8-10 என் கண்களில் பட்டது: 'ஆயிரம் தலைமுறைக்கென்று தேவன் கட்டளையிட்ட வாக்கு.' அப்படியே தொடர்ந்து இறுதி வரை வாசித்தபோது இதழ் விரிந்த மலராக சத்தியம் வெளிப்பட்டது.

- **இது ஆயிரம் தலைமுறைக்கென்று தேவன் கட்டளையிட்ட வாக்கு**
- **ஆபிரகாமோடே அவர் பண்ணின உடன்படிக்கை**
- **ஈசாக்குக்கு இட்ட ஆணை**
- **யாக்கோபோடே செய்த பிரமாணம்**
- **இஸ்ரவேலுக்கு உறுதிப்படுத்திய நித்திய உடன்படிக்கை**

இப்படி வாழையடி வாழையாக பொய் கூறவியலாத தேவனுடைய வாக்குகளே இந்த உடன்படிக்கை. இதனடிப்படையில் அவருடைய மக்களாகிய இஸ்ரவேலருக்கு கானான் தேசம் சுதந்தர பாகமாக உறுதி செய்யப்பட்டது. தொடர்ந்து நிகழ்ந்த இஸ்ரவேலின் வரலாற்றில், தேவன் எவ்வாறு தடைகளை நீக்கி, எதிரிகளைத் துரத்தி, தமது மக்களின் முரட்டாட்டத்தை திருத்தி தமது சொற்களை நிறைவேற்றினார் என்பது மிகத் தெளிவாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த வரலாற்றினை சங்கீதக் காரன் அடுத்துவரும் 34 வசனங்களில் (12-45), வில்லியம் மெக்டொனால்ட் கூறுவதுபோல ஏழு படிகளாகப் பகுத்துக் கூறுகின்றார்:



- **இஸ்ரவேல் நாட்டின் குழந்தைப்பருவம் (105:12-15)**
- **எகிப்து நாட்டின் ஆளுநராக யோசேப்பு உயர்த்தப்படுதல் (105:16-22)**
- **யாக்கோபும் அவன் வீட்டாரும் எகிப்துக்குக் குடியேறுதல் (105:23-25)**
- **மோசேயும் எகிப்தின் கொள்ளை நோய்களும் (105:26-36)**
- **இஸ்ரவேலரின் கானானிய பயணம் (105:37-38)**
- **பாலைவனத்தில் நாற்பதாண்டு பயணம் (39-42)**
- **சுதந்தர பாகத்தைச் சென்றடைதல் (105:43-45)**

பாரத உப கண்டத்திலும் இப்படித்தான் படிப்படியாக நிறைவேறி வருகிறதோ? பொறுத்திருந்து பார்ப்போம்! ஜெபித்திருந்து ஜெயிப்போம்! காத்திருந்து சுதந்தரிப் போம்! ஆமாம், மாநிலங்கள்-மக்கள் கூட்டங்களில் மாற்றங்கள் நிகழ்கின்றதே, மறுரூபம் மலர்கின்றதே!

## நெடிய பயணம் மேற்கொள்வோம்

இந்த சங்கீதத்தின் 44-வது வசனம் சுதந்தரிக்கும் ஜனமாகிய நம் வாழ்வினில் கீழ்ப்படிதல், கைக்கொள்ளுதல் எனும் தேவனின் எதிர்பார்ப்பைச் சுட்டிக் காட்டு கிறது. இந்நிலையையே தேவன் எல்லாக்காலங்களிலும் தமது நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறார். இது நிறைவேறும்போது அவர்களுக்குப் புறஜாதி களுடைய தேசங்களைக் கொடுத்தார்; அந்நிய ஜனங்களுடைய பிரயாசத்தின் பலனைச் சுதந்தரித்துக்கொண்டார்கள், அல்லேலூயா! (45). ஆபிரகாம் துவங்கி யோசுவா வரையிலும் ஏறத்தாழ 525 வருடங்களில் தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேறியிருக்கிறது. அதை சாராம்சப்படுத்தும் விதமாக வசனம் 42 கூறுகிறது: "தேவன் தம்முடைய பரிசுத்த வாக்குத்தத்தத்தையும், தம்முடைய தாசனாகிய ஆபிரகாமையும் நினைத்து நிறைவேற்றினார். சர்வ வல்லமையுள்ள தேவன் ஆபிரகாமோடே இந்த உடன்படிக்கையில் கையெழுத்திட்ட நாள்முதல் (ஆதி.12:1-4) இஸ்ரவேல் மக்களை வாக்குத்தத்த பூமியாகிய கானானுக்கு அழைத்துச்சென்ற காலம் வரை அவர் செய்த அனைத்துச் செயல்களையும் சங்கீதம் 105 வசனம் ஒன்று முதல் ஏழு வரை யிலும் இரத்தினச் சுருக்கமாக எடுத்துரைக்கிறது.

இந்திய தேசத்தை சுதந்தரிக்க விரும்பும் நாமும் இன்றைய நாள்வரைக்கும் நமது நாட்டில் நமக்கிருக்கும் மத சுதந்திரத்திற்காகவும் அனைத்து மாநிலங் கள், மக்கள் கூட்டங்கள், பன்மொழி பேசும் மக்கள் மத்தியில் செய்யப்பட்ட ஊழியங்களுக்காகவும், பலுகி பெருகியிருக்கும் திருச்சபைகளுக்காகவும்; கல்வி, மருத்துவம், என பல துறைகளிலும் ஆவியானவர் நாட்டியிருக்கும்







மைல் கற்களுக்காகத் தேவனைத் துதிப்போம், ஆமாம் எண்ணி எண்ணி துதிசெய்வோம்! என்றபோதிலும் இவைகளெல்லாம் கடலில் காயம் உரசியது போலத்தான். புள்ளியல்துறை சொல்லும் கிறிஸ்தவர் ஜனத்தொகை 2.3% மிஷனரி ஆராய்ச்சியாளர்கள் சொல்வது அதிகபட்சம் 7% சதவிகிதம். என்ற போதிலும் எஞ்சிய 93% சதவிகிதத்தை சந்திப்பது எப்படி என்பது இமய மாய்த் தோன்றலாம். பசிபிக் மகா சமுத்திரத்தை நீந்திக் கடப்பதைப்போலத் தெரியலாம். ஆமாம், நமக்கிருக்கும் பொறுப்பு பெரியது; அது இலக்கு நோக்கிய நெடிய பயணம். ஆகவே, கரங்கள் கோர்த்திடுவோம்; இணைந்து பயணிப்போம்!

## வெற்றிக்கு நடத்தும் யுக்திகள்

அவைகளைச் சாத்தியமாக்க, கடினமானவைகளையும் சரித்திரமாக்க யுத்த விரர்களும், பணித்தள மற்றும் அனைத்து அருட்பணி ஊழியர்களுமாகிய நாம் கடைபிடிக்கவேண்டிய 7 காரியங்களை வசனம் ஒன்றுமுதல் ஏழு வரை மேய்ப்பனும், அரசனுமாகிய தாவீது (இவர் எழுதிய பகுதி என்று சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகின்றனர்) நேர்மறையாகவே தொகுத்துச் சொல்லுகிறார்.

- **கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணுங்கள், துதியுங்கள்**
- **அவரது நாமத்தைக் குறித்து மேன்மை பாராட்டுங்கள்; பிரஸ்தாபமாக்குங்கள்**
- **இறைவனது சரித்திர சாதனைகளை பிரசித்தப்படுத்துங்கள்**
- **அவர் நடப்பித்த அதிசயங்களைத் தியானித்துப் பேசுங்கள்**
- **கர்த்தரையும் அவர் வல்லமையையும் நாடுங்கள்**
- **அவர் சமுகத்தை நித்தமும் தேடுங்கள்**
- **அவர் செய்த அதிசயங்கள், அற்புதம், நியாயத்தீர்ப்புகளை நினைவு கூறுங்கள்.**

இஸ்ரவேலரைப்போலவே இந்தியர்களாகிய நாமும் வணங்காக் கழுத்துள்ள, கடின இதமுள்ளவர்களாயிற்றே. ஆகவே

- தேவனின் கட்டளைகளையும் பிரமாணங்களையும் காத்து நடப்போம்
- தேவனோடு உறுதிமொழி ஏற்போம்; உடன்படிக்கை செய்வோம்; அப்போது
- ஆபிரகாமோடே செய்த உடன்படிக்கையை தேவன் நினைத்தருள்வார்; இந்திய தேசத்தைக் குறித்த தமது பரிசுத்த வாக்குத்தத்தத்தையும் நிறைவேற்றுவார்
- இதன் விளைவாக நமது சுதந்தரபாகமாகிய இந்திய தேசத்தை நாம் நிச்சயமாய் சுதந்தரிப்போம்.

அல்லேலூயா!



– அருட்திரு. **இரா. ஜான் கிருபாகரன்**



# மன அதிர்வுகள்



**அன்புள்ள புதிய பரிமாண வாசகர்களே!**

உலக இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில், எங்களது புதுவருட வாழ்த்துதல்களை வாசகர்களாகிய அன்பு உள்ளங்களுக்குத் தெரிவிப்பதில் எங்கள் இதயம் பூரிப்படைகின்றது.

**"We wish you all a very blessed new year 2025"**

நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள் என்று சீஷருக்கும் நமக்கும் கட்டளையிட்டதுமன்றி, பயப்படாதிருங்கள் உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் (மத். 28:19-20) என்று தைரியத்தையும் வாக்குத்தத்தத்தையும் நமக்கு தந்ததோடல்லாமல், அனுதினமும் தைரியம் கொடுத்துக்கொண்டிருக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நம்மோடிருக்கும்போது, இந்தியாவின் அரசியல் மற்றும் சமூக சூழ்நிலைகள் எப்படியெல்லாம் மாறினாலும், மத எதிர்ப்பாளர்கள் எப்படியெல்லாம் பயமுறுத்தினாலும் அவைகளைக்குறித்து அச்சம் கொள்ளாமல் சுவிசேஷப்பணியை தொடரச் செய்து திருச்சபைகளை உருவாக்கும் இறைபணியைச் செய்ய நாம் அனைவரும் கடமைபட்டுள்ளோம். அனைத்து திருச்சபைகளின் தலையாய இக்கடமையை இணைந்து செயல்படுத்துவதில் முனைப்பு காட்டுவோம், அதற்கான முயற்சிகளை முன்வைப்போம், சவால்களை துணிந்து எதிர்கொள்வோம். *"காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்"* என்ற பழமொழிக்கு இணங்க இந்திய சுவிசேஷப்பணி விரிவாக்கத்திற்கு இது வசந்த காலம்; அப்படியானால் காரிருள் காலம் இன்னும் எத்தனை கடுமையாகவும் கொடுமையாகவும் அநீதியின் ஆட்சியுடன், எப்படியும் இருக்கலாம் என்பதை அனுமானித்துக் கொள்வோம். ஆகவே நம்மால் இயன்ற வரை இந்த காலத்தையும் வாய்ப்பையும் அலட்சியப்படுத்தாதபடி, இழந்துபோகாதபடி, இணைந்து, துணிந்து, விரைந்து செயல்பட கர்த்தரின் செயல் வீரர்களாகிய (2கொரி 5:20) நம் அனைவருக்கும் தேவன் அருள்புரிவாராக! தேவனுக்கே மகிமை!



சுவிசேஷ ஊழியத்தினிமித்தம் கடுமையாக தாக்கப்பட்டு இடது கால் செயல் இழந்த நிலையிலும் வைராக்கியமாக சுவிசேஷ ஊழியத்தை குடும்பமாக இராஜஸ்தான் மாநிலத்தில் செய்து வரும் மிஷனரி திரு சுந்தர்லால்.

## அரசியல் ஸ்திரமின்மை - சமூகப் பிரிவினை சூழலில் சுவிசேஷப் பணி

இந்திய அரசியல் சூழ்நிலை எந்த நேரத்திலும் எப்படியும் மாறலாம், நீதி நேர்மை என்ற வார்த்தைகளுக்கு அடையாளமே இல்லாமல் போகலாம் என்ற நிலைமையில் நமது நாடு போய்க் கொண்டிருக்கிறது. அதற்கு ஏற்றவாறு சமூகச் சக்திகளும் மத எதிர்ப்பாளர்களும் உருவாக்கப்பட்டு வருவதோடு அரசியல் லாபங்களுக்காக குழப்பங்களையும் அசாதாரண சூழ்நிலைகளையும் உருவாக்க பயிற்றுவிக்கப்படுகிறார்கள். 1960-களில் இருந்த சமுதாய ஒருங்கிணைப்பும் கட்டுப்பாடுகளும் மெது மெதுவாக அழிந்து வருகின்றன. ஜாதி மத பேதங்களை எந்த அளவிற்கு உருவாக்க முடியுமோ அந்த அளவிற்கு உருவாக்கி அரசியல் சம்மட்டிகளால் உடைத்து உருக்குலைத்து நம்மைச் சுற்றி விரிக்கப் பட்டிருக்கும் சூழ்ச்சி வலைகள் மத்தியிலும் (மத். 24:10-12) **“நான் உங்களோடிருக்கிறேன் உலகம் உங்களை பகைத்தால் அது என்னை பகைத்ததென்று அறியுங்கள்”** என்று இயேசு நம்மை தைரியப்படுத்துகின்றார். (யோவா. 15:18) ஆகவே அசாதாரண சூழ்நிலைகளையோ, ஆச்சரியப்படுமளவிற்கு அநீதிகளையோ, சந்தர்ப்ப வாதங்களையோ எதிர்கொள்ளும்போது **“திகையாதே கலங்காதே நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்“** (யோசு:1:9). **“உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் உங்களோடிருக்கிறேன்”** (மத். 28:20) என்று வாக்குக் கொடுத்த வாக்கு மாறாத நமது இரட்சகரை முன் வைத்து எதற்கும் தயார் என்ற நிலைபாட்டிற்கு இந்திய திருச்சபையும் திருச்சபை மக்களும் துணிந்து நின்று செயல்பட்டால் மட்டுமே இனியும் நாம் சுவிசேஷத்தை சுமக்க முடியும்; சுவிசேஷத்தை பரப்ப முடியும்; துணிவோம் விரைந்து செயல் படுவோம்! தேவனுக்கே மகிமை!

## பணித்தள நிலவரமும் பணியாளர்கள் தேவையும்

நவம்பர் மாதத்தில் அருட்திரு ஜான் கிருபாகரன் மற்றும் திரு ஐசக் தாஸ் அவர்களோடு நானும் இராஜஸ்தான் மற்றும் குஜராத்திலுள்ள பணித்தளங்களை பார்வையிட உதயப்பூரிலிருந்து கிராமங்களின் வழியாக பிரயாணித்த போது வழி எங்கிலும் இந்துக்களின் கோவில்களைப் பார்த்தோம். ஆனால் கிறிஸ்துவின் ஆலயமோ அல்லது சிறு ஜெபக்கூடமோ எங்குமே தென்படவில்லை. இன்னும் ஏராளமான கிராமங்களில் இயேசு அறிவிக்கப்படவில்லை. இன்னும் ஏராளமான மக்கள் கிறிஸ்துவின் தொழுவத்திற்கு வெளியே இருக்கிறார்கள். சூழ்நிலைகளும் சுவிசேஷத்திற்கு விரோதமாக மாறிவருகிறது. இப்படிப்பட்ட



புதிய பணித்தளங்கள் திறக்கவும் புதிய ஊழியர்களை கண்டு பிடிக்கவும் நமது மிஷனரிகளோடு நடத்தப்பட்ட செயல் திட்டக் கூட்டம் : ராஜஸ்தான்

சூழ்நிலையில் கிறிஸ்துவின் சிலுவையை கிராமங்களுக்கும் தொலை தூரங்களுக் கும் சுமந்து செல்லக்கூடிய தேவ ஊழியர் களின் எண்ணிக்கையும் தேசிய அளவில் குறைந்துகொண்டே வருகின்றது.

நான் வாலிபனாக இருந்தபோது வீட்டி லும் சரி ஆலயத்திலும சரி, ஊழியத்தைக் குறித்த பேச்சும் ஊழிய அழைப்புமே ஒவ்வொரு ஞாயிறு ஆராதனையிலும் மேலோங்கி நிற்கும். ஆனால் இக்காலத் தில் திருச்சபையில்கூட இதைக்குறித்த விழிப்புணர்வு யாரும் கொடுப்பதில்லை, கொடுத்தாலும் அங்கீகரிப்பதில்லை. மிஷனரி ஊழியத்திற்கு அர்ப்பணிப்பவர் களை மதித்தும் உதவியும் ஊக்கப்படுத் தின காலங்கள் மறைந்து, மிஷனரிக ளும் போதகர்களும்கூட தங்கள் பிள்ளை களை Professional Education-க்கே அனுப்பவேண்டும் என்று பிடிவாதமாக முயற்சி செய்யும் காலத்தில் நாம் வாழு கின்றோம். திருச்சபை, குடும்பம், சமூகம் அனைத்தும் தங்கள் பிள்ளைகளுக்கு பிறந் ததிலிருந்தே உலகப்பிரகாரமான வாழ் வில் உயரத்தை தொடும்படி வழிகாட்டு கின்றனரே தவிர, கடவுள் ஊழியத்தைக் குறித்த விழிப்புணர்வு கொடுக்காதது ஊழியர்களின் பற்றாக்குறைக்கு வழி வகுப்பதுடன் இந்தியா சந்திக்கப்பட வேண் டும் என்ற கனவு பலிக்குமா என்று நம்மை யோசிக்க வைக்கிறது. கிறிஸ்துவுக்காக தியாகத்தோடு தங்கள் பிள்ளைகளை அர்ப்பணிக்கும் நாட்களுக்காக காத்திருப் போம். கிறிஸ்துவுக்காக தங்கள் விசுவாசி களை வழிநடத்தும்படி போதகர்களுக்காக, மிஷனரிகளுக்காக ஆண்டவரிடம் மன் றாடுவோம். 1970-களில் இருந்த ஊழிய தாகமும் வேகமும் இன்றய கிறிஸ்தவ சமுதாயத்திற்கும் ஊழியர்களுக்கும் தேவன் தந்திட போராடி ஜெபிப்போம்.

## நமது பணித்தளங்களில் தேவனுடைய கூடாரங்கள்

இந்தியாவிலுள்ள மதமாற்றத் தடைச் சட்டம் அமுலில் இருக்கும் 8 மாநிலங்களில், இச்சட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் ராஜஸ்தான் மாநிலம் பெரும் பங்கு வகிக் கின்றது. உதயப்பூர் மாவட்டத்தில் பிறந்து வளர்ந்து BJP கட்சி மூலமாக சட்டசபை உறுப்பினரான ஒருவருக்கு, அம்மாநிலத் தில் சுவிசேஷ ஊழியம் மற்றும் கிறிஸ்தவ செயல்பாடுகளை தடை செய்யவும் ஒடுக் கவும் பொறுப்பு கொடுக்கப்பட்டிருப்பது, நமது ஊழியங்களுக்கும் குறிப்பாக சபை கட்டுமானப் பணிக்கு பெரும் சவா லாக இருக்கிறது

ஆனால் கர்த்தருடைய பெரிதான கிருபை யால் தடைகள் அனைத்தையும் தாண்டி சல்தரி என்ற கிராமத்தில் அழகிய இந்த சபை கட்டிடம் கட்டி முடித்து 10.11.2024-ஆம் தேதி அன்று தேவ நாம மகிமைக் காக அருட்திரு ஜான் கிருபாகரன் அவர்



சல்தரி கிராமத்தில் 10—11—2024 அன்று தேவ நாம மகிமைக்காக திறக்கப்பட்ட ஆலயம் : ராஜஸ்தான்



ஹட்மத் கிராமத்தில் 12—11—2024 அன்று தேவ நாம மகிமைக்காக திறக்கப்பட்ட ஜெபக்கூடம் : குஜராத்



பிஜிலி என்ற கிராமத்தில் ஆலம் கட்டுவதற்காக 9—11—2024 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது : ராஜஸ்தான்

களால் அர்பணிக்கப்பட்டது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம். தேவனுக்கே மகிமை!

இதைப்போல குஜராத்திலுள்ள ஹட்மத் என்ற இடத்திலும் ஒரு ஜெபக்கூடம் கட்ட பல வருடங்களாக பஞ்சாயத் அனுமதி கிடைக்காத நிலையில் சட்டமன்ற உறுப் பினர் கொடுத்த தைரியத்தில் ஆறு மாத காலத்தில் அழகியதொரு ஆலயம் கட்டி முடித்து தேவநாம மகிமைக்காக 12-11-2024 அன்று அருட்திரு ஜான் கிருபாகரன் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்த ஜெபக்கூடம் கட்டுவ தற்கு நமது மிஷனரியின் நெருங்கிய சொந்தக்காரர்களும் கிராமத்தவர்களும் நினைத்துப் பார்க்கமுடியாத பல தடை களை உருவாக்கினர்; தங்களால் இயன்ற வரை முயற்சித்தனர். அவை அனைத் தையும் தாண்டி நிலைவரமாக இயேசு கிறிஸ்துவின் வல்லமையை வெளிப் படுத்தும்படி இந்த தேவாலயம் நிமிர்ந்து நிற்பது தேவக் கிருபையே. தேவனுக்கே மகிமை!

ஒரு வருடத்திற்கு குறைந்தது ஐந்து ஆலயங்களையாவது கட்டுவதற் கும் அதற்கான பொருளாதாரத் தேவை களை கர்த்தருடைய பிள்ளைகள் தந்துதவு வதற்கும் தேவன் உதவி செய்து வருகி றார். ஆனால் தேவைகளை சீர்தூக்கிப் பார்க்கும் போது வருடத்திற்கு குறைந்தது 12 ஆலயங்களாவது அதாவது, ஒவ்வொரு மாதமும் குறைந்தது ஒரு ஆலயமாவது கட்ட தேவன் கிருபை செய்யும்படிக்கும் அதற்கான பொருளாதாரம் தேவ பிள்ளை கள் மூலம் கடவுள் நமக்குத் தந்தரு ளும்படி எங்களோடு இணைந்து ஜெபிக் கவும் தாழ்மையாய் கேட்டுக்கொள்கி றோம். காடுகளிலும் தொலைதூர கிராமங் களிலும் உள்ள விசுவாசிகளும் நம்மைப் போல நல்ல வசதியான, மகிமையான பரிசுத்தமான சூழ்நிலையில் தேவனை ஆராதிப்பது தேவசித்தமாயிருக்கிறது. அதற்காக சிரத்தை எடுத்து உதவுவது, எல்லா விதத்திலும் வளர்ந்து செழித் தோங்கிய திருச்சபைகளில் அங்கத்தின ராக இருக்கும் நமக்கு நன்மைகள் அருளிய தேவனுக்கு நாம் செய்யும் நன்றிக் கடன் மற்றும் நம்மேல் விழுந்த கடமையுமாகும். இதற்காக நம்மை அர்ப் பணிப்போம்! விரைந்து செயல்படு வோம்!! தேவனுக்கே மகிமை!!!

## திருச்சபைகளின் வளர்ச்சியும் சுவிசேஷப்பணியும்

சுவிசேஷப்பணியை ஒதுக்கி வைத்து விட்டு திருச்சபைகளின் வளர்ச்சியை

பார்ப்போமென்றால் நிச்சயமாக திருச் சபைகள் நன்றாக வளர்ந்திருக்கின்றன. ஆனால் திருச்சபையின் வளர்ச்சியின் அளவுகோலே சுவிசேஷப்பணிதானே. அப்படியென்றால் திருச்சபைகள் உண் மையான வளர்ச்சியை அதாவது இயேசு விரும்பும் வளர்ச்சியை எண்ணவில்லை, எட்டவில்லை என்பதுதானே உண்மை.

சமீபத்தில்வளர்ந்தஒருதிருச்சபைத்தலை வரை நான் சந்தித்தபோது அவர்கூறிய சில வார்த்தைகள் என்னை மிகவும் அதிர்ச்சி யிலும் துக்கத்திலும் ஆழ்த்தியது. அதிர்ச் சிக் காரணம் சுவிசேஷ ஊழியத்தின் முக்கியத்துவத்தை சரிவர புரிந்துகொள் ளாததே. துக்கம் என்னவென்றால், அவர்களது சுயநல மனப்பான்மையினி மித்தம் எங்கள் திருச்பைக்குள்ளேயே இன்னும், எவ்வளவோ செய்ய வேண்டியுள்ளது, இந்த நிலைமையில் நாங்கள் வெளியே உள்ளவர்களுக்காக அதிலும் வட இந்தியர்களுக்காக கரிசனை கொள்ள எங்களுக்கு இப்போது நேரமும் இல்லை, அதற்கான மனமும் இல்லை என தயக்கமின்றி உச்சரித்ததுதான்.

வேதம் சொல்லுகிறது, இந்த தொழுவத்தி லில்லாத வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; காணாத ஆட்டை தேடி கண்டு பிடித்தபோது அதாவது ஒரு பாவி மனம் திரும்பும்போது பரலோகத்தில் மிகுந்த சந்தோஷமுண்டாயிருக்கும் (லூக்:15:10). ஆகவே புறம்பே இருக்கிறவர்களைக் குறித்தே முதலில் அக்கறை கொள்ள இயேசு விரும்புகிறார். அதுவே திருச்சபை யின் வளர்ச்சி, மகிழ்ச்சி, புகழ்ச்சி. எத் தனை பெரிய கோபுரம் கட்டினாலும், எத் தனை ஆத்தும அறுவடை என்பதில் தானே அறுவடை நாயகன் கண்ணா யிருப்பார். சிந்திப்போம்; பிரிவினைகளை தகர்ப்போம்! இணைவோம்; தோள் கொடுப்போம்! விரைந்து செயல்படு வோம்! தேவனுக்கே மகிமை!

## சீஷத்துவ உடன்படிக்கை

எப்படிப்பட்டதடைகள்வந்தாலும்அனைத் தையும் தாண்டி கர்த்தர் கொடுத்த கட் டளை எல்லா மிஷனரிகளாலும் முக்கியப் படுத்தப்படுவதோடு, திருமுழுக்கு கொடுக்க குறியாக இருப்பது, தேவ பிரமாணங்களை நிறைவேற்றுவதில் நமது மிஷனரிகள் எத்தனை ஆர்வமும் எவ்வளவு கவனமுமாக செயல்படுகிறார் கள் என்பதை நமக்கு தெளிவுபடுத்து கின்றதல்லவா. கடந்த 12 மாதங்களில்



உத்திராகண்ட் மாநிலத்தில் எதிர்ப்பின் மத்தியிலும் சோர்ந்து போகாது உற்சாகமாக இயேசுவை ஆராதிக்கும் புது விசுவாசிகள்



உத்திர பிரதேசத்திலுள்ள சைதாப்பூரில் திருமுழுக்கு பெற்ற புது விசுவாசிகள்



குஜராத், லக்கன்பூர் பணித்தளத்தில் திருமுழுக்கு

மட்டும் 771-க்கும் அதிகமான புது விசுவாசிகளுக்கு திருமுழுக்குக் கொடுக்க தேவன் கிருபை செய்தார். இன்னும் 100-பேருக்கு அதிகமாக திருமுழுக்கு பெறுவதற்குக் காத்திருக்கின்றனர்; காரணம் தீய சக்திகளுடைய கண்களை மறைத்துதானே திருமுழுக்கு பெற முடியும். ஒருபக்கம் திருமுழுக்கு பெற்று விசுவாசத்தை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள் என்று நாம் கற்பிக்கிறோம்; மறுபக்கம் திருமுழுக்கு பெறுபவர்களை சிறையிலடைக்க சாத்தான் காத்துக் கொண்டிருக்கிறான். அண்ட சராசரத்தையும் படைத்த ஆண்டவர் என்னை ஆட்கொண்டார் என்பதை வெளிப்படையாகச் சொல்வதிலும் அதை திருமுழுக்கு வழியாக உறுதிப்படுத்துவதிலும் எத்தனை சவால்கள். இந்த நிலை மாறவும் மதச் சுதந்தரம் முழுமையாகக் கிடைக்கவும் தொடர்ந்து ஜெபிபோம். தேவனுக்கே மகிமை!

## சமுதாய முன்னேற்றப் பணிகளும் சுவிசேஷ ஊழியமும்

கல்விக்கு உதவினவர்களைக்குறித்து புத்தகங்களில் அறிவு கண்களைத் திறந்தவர்கள் என்று வாசிக்கிறோம். அது எத்தனை உண்மையிலும் உண்மை என்பதை நாங்கள் நடத்தும் சிறுவர் பயிற்சி மையத்திற்கு வரும் பிள்ளைகளின் நடை உடை பாவனைகள் மற்றும் கல்வியில் அவர்களது முன்னேறங்களை வைத்து கண்கூடாகக் காண்கிறோம்; உணர்ந்திருக்கிறோம். காடுகளிலும் தொலை தூர கிராமங்களிலும் கல்வியைக்குறித்த மணமோ மனமோ இல்லாத கிராமங்களில் வாழும் வருங்கால தலைமுறை மற்றும் திருச்சபையின் தலைவர்களாக தேவனால் உருவாக்கப்பட காத்திருக்கும் இந்த பொன்னான கண்மணிகளின் அறிவுக் கண்களை கல்வியின்மூலம் திறந்து அவர்களின் வாழ்வில் பெரியதொரு மாற்றத்தை உருவாக்க அனைவருக்கும் கிறிஸ்து ஊழியம் காரணமாயிருக்க தேவன் கிருபை செய்யட்டும்; சார்பு நிறுவனங்களான பரிவர்த்தன் அறக்கட்டளை, கிரேஸ் கிருபாலயா ஆகியவைகளின் முயற்சிகளை தேவன் கனம் பண்ணுவாராக! அதற்காக தோள் கொடுக்க உங்களையும் அன்போடு அழைக்கிறோம்!

## திருப்பங்கள்

கர்த்தருடைய பெரிதான கிருபையால் ஜனவரி 2025-ல், 71 வயது முடிந்து 72-ஆம் வயதில் அடி எடுத்து வைத்துள்ள எனக்கு, முழு நேர ஊழியக் களத்தில் 25 வருடங்கள் வட இந்தியப் பணித்தளங்களிலும் 21 வருடங்கள் தமிழ்நாட்டிலுமாக 46 வருடங்கள் கர்த்தருடைய பணியை செய்ய தேவன் கிருபை கூர்ந்தமைக்காக அவரை நான் ஸ்தோத்தரிக்கிறேன். CMS என்ற சிறுவர் ஊழிய இயக்கத்தில் சாதாரண உதவி விடுதிக் காப்பாளராக 1978-ல் என்னை பணி அமர்த்திய தேவன், பிறகு சீலோவாம்

இயக்கத்திலும், பின்னர் FMPB மூலமாக அதன் துணை இயக்கமாகிய நவஜீவன் சேவா மண்டலிலும், இப்போது கர்த்த ருடைய கிருபையினால் "அனை வருக்கும் கிறிஸ்து ஊழியங்களிலும்" ஆத்தும ஆதாயப் பணி செய்யும் வாய்ப் பைக் கொடுத்திருக்கிறார். நவஜீவன் சேவா மண்டலிலிருந்து 2019-ல் பணி ஓய்வு பெற்றபிறகும், "அனைவருக்கும்கிறிஸ்து ஊழிய" இயக்கத்திலும் முழு நேர இயக்கு நராகப் பணி செய்ய தேவன் கிருபை புரிந்ததை நினைத்தால் ஆச்சரியத்தி லும் ஆச்சரியமே! கர்த்தருக்கு ஸ்தோத் திரம்.

அனைவருக்கும் கிறிஸ்து ஊழியங்களில் 2019-ஆம் வருடத்தில் இணையும் போது எனது பணி இணைவு சாட்சியை எழுத அனுமதித்த தேவன், இப்போது முழுமன நிறைவுடனும் ஊழிய திருப்தி



தேசபக்தி மற்றும் ஒருமைபாட்டை செயலில் காட்டும் நமது சிறுவர் கல்வி மைய பிள்ளைகள்

நமது பணித்தளத்திலுள்ள சிறு பிள்ளைகளுக்கு அக்கறையோடு பாடம் சொல்லிக்கொடுக்கும் கல்வி உதவி மைய்ய ஆசிரியை



யுடனும் நானும் எனது மனைவியும் நமது இயக்கத்திலிருந்து ஊழியப் பணி நிறைவு பெறுவதில் மிக்க மகிழ்சியடை கிறோம். Navjeevan Seva Mandal-ல் பணி நிறைவு பெற்ற பின்னும் கர்த்தரு டைய பணியைச் செய்ய எங்களுக்கு அழைப்புக் கொடுத்து, எங்களை ஊக்கு வித்து உடனிருந்து தேவப் பணியில் மனம் மகிழச் செய்த அருட்திரு. ஜான் கிருபாகரன் அண்ணன் மற்றும் எல்லா விதத்திலும் ஊக்கம் கொடுத்து ஊழியக் காரியங்களில் தோள் கொடுத்துதவிய செயற்குழு அங்கத்தினர்களுக்கும் எங் களது மனமார்ந்த நன்றிகள். அனை வருக்கும் கிறிஸ்து ஊழியர்களும் ஊழியப்பங்காளர்களும் எங்களை உங் கள் ஜெபத்தில் நினைத்துக் கொள்ளுங் கள்.

நமது இயக்கத்தை தொடர்ந்து ஊழிய வெற்றிப்பாதையில் நடத்தும்படி தேவன் திரு ஐசக் தாஸ் அவர்களைத் தெரிந் தெடுந்திருக்கிறார். கடந்த ஒரு வருடமாக நமது இயக்கத்தின், பணிநுணுக்கங்களை கற்றுக்கொள்ள தேவன் அவர்களுக்கு கிருபைசெய்திருக்கிறார். அவருக்காகவும் அவரது குடும்பத்திற்காகவும் ஜெபிப்ப தோடு, 2025 ஏப்ரல் முதல் நமது இயக் கத்தின் பணிகள் அவரது தலைமை யில் அடுத்ததொரு மைல் கல்லுக்கு தேவன் வழி நடத்தஅவர்களுக்கு நாம் தோள் கொடுப்போம்; இணைந்து செயல் படுவோம். தேவகரம் நம்மை நடத்துவ தாக! தேவனுக்கேமகிமை!

**அருட்திரு. ஆர். டி. ஜெயப்பால்**
நிர்வாக இயக்குநர்

# பணித்தளப் பார்வை

கிறிஸ்துவுக்குள் எங்கள் அன்பான வாசகர்களே,

நம்மில் கிரியை செய்யும் வல்லமையின்படி நாம் கேட்பதற்கும் நினைப்பதற்கும் மேலாக, மிகுதியாகச் செய்யக்கூடிய நமது ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் நல்வாழ்த்துக்கள். அல்லேலூயா!

நீங்கள் அறிந்திருக்கிறபடி, நான் மார்ச் 2024-ல் **"அனைவருக்கும் கிறிஸ்து ஊழியங்கள் - இந்தியா"** இயக்கத்தில் இணைந்தேன். ஆண்டவருக்குச் சித்தமானால், மார்ச் 2025 இல் நிர்வாக இயக்குநராகப் பொறுப்பேற்க உள்ளேன். நமது இயக்கத்தின் தலைவர்: மறைதிரு ஆர். ஜான் கிருபாகரன் மற்றும் தற்போதைய நிர்வாக இயக்குனர் மறைதிரு ஆர்.டி. ஜெயபால் ஆகிய இருவருடனும் இணைந்து, உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், ராஜஸ்தான், குஜராத், ஹரியானா, பஞ்சாப், ஆந்திரா, உத்தராகண்ட் போன்ற இந்தியாவின் பல்வேறு மாநிலங்களுக்குச் செல்ல தேவன் எனக்கு கிருபை பாராட்டினார். இந்த பயணங்களின் போது, தேவன் தம்முடைய ராஜ்ய வளர்ச்சிக்காக நமது மிஷனரிகள் மூலம் என்ன செய்திருக்கிறார் என்பதை என்னால் கண்கூடாக பார்க்க முடிந்தது. "எப்பக்கத்திலேயும் உபத்திரவப்பட்டோம்; புறம்பே போராட்டங்களும், உள்ளே பயங்களும் இருந்தன." (2 கொரி. 7:5).





எங்கெல்லாம் மக்கள் நெருக்கப்படுகிறார்களோ அங்கெல்லாம் அநேக ஆத்துமாக்கள் விசுவாசித்து திருமுழுக்கு ஞானஸ்நானம் பெறுகிறதை காண முடிந்தது! கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம்!

நான் பயணம் செய்யும் போது, ஒரு வாக்கியம் என் நினைவுக்கு வந்து கொண்டே இருந்தது: "Reaching the Lost Till the Last" (கிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திக்கப்படாத கடைசி இந்தியனையும் சந்தித்து சீடராக்குவது) இதுதான் **"அனைவருக்கும் கிறிஸ்து ஊழியங்கள் - இந்தியா"**வின் தரிசனம் மற்றும் குறிக்கோள். அதற்காக நான் தேவாதி தேவனுக்கு நன்றி பலிகளை ஏறெடுக்கிறேன். இதை நான் யோசித்துக் கொண்டிருந்தபோது: இந்தியா முழுவதையும் சந்திக்க முடியுமா? ஒவ்வொரு இந்தியருடனும் நற்செய்தியை எவ்வாறு பகிர்ந்து கொள்வது? இந்த

மாபெரும் பணியை எப்போது முடிப்போம்? நீங்கள் அவரை உண்மையிலேயே நேசிப் பீர்களானால், இந்தக் கேள்விகள் நிச்சய மாக உங்களையும் தாக்கும்! எனக்கும் அது தான் நடந்தது. தேவன் எனக்கு தந்து வரும் பதில், காட்டும் வழிகள் வினோத மானவைகள்:



L4 மாநாட்டில்: போதகர்.
வஹான் ராபர்ட்ஸ் அவர்களுடன்.

"Lausanne Movement" (L4) என்ற மாநாட் டிற்காக தென் கொரியாவுக்குச் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. கிறிஸ்துவின் சரீரமாகிய உலகத் திருச்சபை குறித்த தான ஒரு சிறிய / போதுமான அறிமுகம் எனக்குக் கிடைத்தது. அந்த மாநாட்டின் (L4) நான்கு கொள்கைகளைக் கொண்ட தரிசனம் என்னவென்றால்:



L4 மாநாட்டில்: போதகர்.
ரிக் வாரன் அவர்களுடன்...

1. **ஒவ்வொரு நபருக்கும் நற்செய்தி.**
2. **ஒவ்வொரு இன மக்களுக்கும் சீடர் களை உருவாக்கும் திருச்சபை.**
3. **ஒவ்வொரு திருச்சபைக்கும், அருட்பணி அமைப்புகளுக்கும் கிறிஸ்துவைப் போன்ற தலைவர்கள்.**
4. **சமூகத்தின் ஒவ்வொரு அமைப்பி லும் தேவ ராஜ்யத்தின் தாக்கம்.**



L4 மாநாட்டில்: இந்திய-தென் கொரிய போதகர்கள்
ராவின் & ஜீவன் ஆகியோருடன்..

இந்த நான்கு விஷயங்களும் என்னைப் பாதித்தது மட்டுமல்ல, உலகின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மற்ற தலைவர்களின் நேர்காணல் மற்றும் பகிர்வுகளும் என்னை சவாலுக்கு அழைத்தது. குறிப்பாக ஈரான், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், சீனா மற்றும் வட கொரியா போன்ற நாடுகளின் நடப்புச் செய்திகளை நேரடித்தகவல்களாகக் கேட்டபோது, நான் இந்தியாவை ஒப்பிட்டுப் பார்த்தேன்! உண்மையைச் சொல்வதென்றால், நாம் இப்போது இந்தியாவில் அனுபவிக்கும் உபத்திரவம் இந்த நாடுகளை விட 10 மடங்கு குறைவு என்பது உறுதி! அவர்களின் சாட்சியங்களால் நான் மெய் சிலிர்த்துப்போனேன்; நான் L4 மாநாட்டில் கலந்துக் கொண்டது கர்த்தரின் திட்டம் என்பதை நிச்சயமாக உணருகிறேன். இதற்கு காரணமாக இருந்த அண்ணன் மார்க் விசுவாசம் அவர்களுக்கும் நன்றி கூறுகிறேன்.



இப்போது, அப்போஸ்தலன் பவுலுடன் சேர்ந்து நானும் தைரியமாகச் சொல்ல முடியும், 'கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்.' இப்போதெல்லாம், நான் எங்கு சென்றாலும், எங்கள் மிஷனரிகளையும் சக விசுவாசிகளையும் மத்தேயு 28:18-20-ஐ மையமாக கொண்டே ஊக்குவிக்கத் துவங்கியுள்ளேன்; "அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி...".

அனைவருக்கும் கிறிஸ்து ஊழியங்களின் மூத்த தலைவர்களிடம் இருந்து நான் இன்னும் பல காரியங்களை கற்றுக் கொண்டு வருகிறேன். மேலும், "வாழ்க்கையை திரும்பிப் பார்த்தல்" (Life Revision Seminar) எனும் கருத்தரங்குகளை சர்வ தேச அரங்கில் நடத்திவரும் டாக்டர். K.O. ஜான் அவர்களிடமிருந்தும் நான் நிறைய கற்றுக்கொண்டேன். நான் அவருடன் கிட்டத்தட்ட 6 வருடங்கள் இந்தியா மற்றும் பல நாடுகளுக்கும் பயணம் செய்திருக்கிறேன். இந்த தேவ மனிதர்களுக்காகவும் அவர்களின் வாழ்க்கைக்காகவும் தேவனைத் துதிக்கிறேன். எனது வாழ்க்கை மற்றும் ஊழிய பயணத்தில் இவர்களை மாதிரிகளாகக் கொண்டிருப்பது எனது பெரும் பாக்கியம். தேவன் அவர்களுக்கு நீண்ட ஆயுளைத் தந்து, வரும் நாட்களில் அவரது ராஜ்ய விரிவாக்கத்திற்கு வல்லமையுடன் பயன்படுத்துவாராக!

என் குடும்பத்தைப் பற்றி: என் மனைவி திருமதி வசந்தி, என்னுடன் வளைகுடா நாட்டில் பணிபுரிந்த ஒரு கட்டிட வடிவமைப்பாளர் (Building Architect); அவர்களும் தனது வேலையை ராஜினாமா செய்து என்னுடன் ஊழியம் செய்கிறார்கள். எங்கள் மகன் ஸ்டான்லி ஜெபக்குமார் 12-ம் வகுப்பு படிக்கிறான். எங்களையும், எங்கள் மகனின் எதிர்காலத்திற்காகவும் உங்கள் ஜெபங்களில் நினைவு கூருங்கள்.



அடுத்த இதழில் விவரமாக ஊழியக்காரியங்களை தெரியப்படுத்துகிறேன். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! அவருடைய பரிசுத்த நாமத்திற்கே எல்லா மகிமையும் உண்டாவதாக!!

கிறிஸ்துவுக்குள் உங்கள் சகோதரன்,

**A. ஐசக் தாஸ்** – நிர்வாக இயக்குனர் (நியமனம்)




# புதிய தாள் எனக்கு உண்டா?

நடுக்கத்துடன் என்னிடம் வந்து
புதிய தாள் எனக்கு உண்டா டீச்சர்
தயக்கத்துடன் கேட்டான் அச்சிறுவன்!

அழுக்கடைந்த கறைபடிந்த அத்
தாளை நான் பெற்றுக்கொண்டு
அப்பழுக்கற்ற புதியதாளை கொடுத்தேன்!

தொய்ந்திருந்த அவன் இதயத்தில்
மயிலிறகால் வருடியது போல் சொன்னேன்,
“இன்னும் சிறப்பாகச் செய்”

நடுக்கத்துடன் சிம்மாசனம் சென்று
புதிய நாள் (ஆண்டு) எனக்கு
உண்டா? கடவுளே!
தயக்கத்துடன் கேட்டேன் நான்!

அழுக்கடைந்த கறைபடிந்த அந்த
நாளை (ஆண்டை) பெற்றுக்கொண்டு
அப்பழுக்கற்ற புதிய நாளை
(ஆண்டைக்) கொடுத்தார்.

தோய்ந்திருந்த என் இதயத்தில்
மயிலிறகால் வருடியது போல் சொன்னார்
“இன்னும் சிறப்பாகச் செய்”

மேலே உள்ள கவிதை ஒரு தொடக்கப் பள்ளி ஆசிரியையால் எழுதப்பட்டது. இதற்கு மேல் புத்தாண்டின் சாராம் சத்தை வெளிப்படுத்த முடியாது என நினைக்கிறேன். இப்புதிய ஆண்டை நாம் சிறப்பாகக் கடக்க என் இருதயத் தில்; ஆண்டவர் கொடுத்த வார்த்தை 1 பேதுரு 2:9 **“நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வர வழைத்தவருடைய புண்ணியங் களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீக மான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்த மான ஜனமாயும் இருக்கிறீர்கள்.**

அவருக்குச் சொந்தமான ஜனம், அவரது உரிமைச் சொத்தான மக்கள், (God's own people). நான் அவரது உரிமைச் சொத்து! நமக்கு இது நிச்சயம் சத்து தரும். அவருக்கு நான் உரிமைச் சொத்து என்றால் எனக்கு இரண்டு முக் கிய கேள்விகள் உண்டு. என் வாழ்வின்

மையம் எது? (What is my centre?) என் வாழ்வின் சுற்றளவு எது? (What is my circumference?) மையத்திற்கும், சுற்றளவிற்கும் மிகுந்த தொடர்பு உண்டு.



**Dr. E. ஸ்டான்லி ஜோன்ஸ்** மனமாற்றத்தை வரையறுக்கும் போது "கிறிஸ்துவின் கிருபை மற்றும் வல்லமையால் சுயநலத்தின் ராஜ்ஜியத்திலிருந்து, தேவனுடைய ராஜ்யத்திற்கு செல்வது. இது படிப்படியாகவோ அல்லது திடீரெனவோ நிகழும்", என்று கூறுகிறார். இன்னமும் நம் வாழ்வின் மையத்தில் சுயநலம் தான் சிம்மாசனமிட்டு அமர்ந்துள்ளதா?

இஸ்ரவேல் மக்களின் வாழ்வின் மையத்தில் எருசலேம் தேவாலயம் இருந்தது. தேவாலய பிரம்மாண்டம், மகிமை மற்றும் அதைச் சுற்றி கட்டப்பட்டிருந்த ஏராளமான அமைப்புகள் (Systems) அதுதான் மையம். அதை நிறைவேற்றி வாழ்வதுதான் அவர்களது சுற்றளவு. அப்படிப்பட்டவர்களிடம் இயேசு நின்று **"தேவாலயத்திலும் பெரியவர் இங்கே இருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்கிறேன்"** (மத்தேயு 12:6) என்றார். நமது மத அமைப்புகள் கிறிஸ்துவிலும் பெரியவைகளாக மாறினால் குழப்பம் தான். இன்றைக்கும் ஒரு சிலருக்கு ஆலய பக்தி, ஆலயக் கட்டிடத்தை கட்டி கொடுக்க வேண்டும் என்ற ஆவல், ஆலயத்தை சுற்றியமைக்கப்பட்டுள்ள அமைப்புகளின் மீதுள்ள வெறி! ஆனால் இவைகளிலும் கிறிஸ்து பெரியவர். அவரே பிதாவை வெளிப்படுத்தியவர்; எளிமைப்படுத்தி நமக்குக் காட்டியவர்; மிக நெருக்கமாக்கியவர்; நாம் புரியும் மொழியில் பேசி புரிந்து கொள்ள வைத்தவர். எருசலேம் தேவாலயம் இருந்த இடத்தில் இன்று எஞ்சி நிற்பது Wailing wall – கண்ணீர் சுவர்! ஆனால் கிறிஸ்து இன்றும் விஞ்சி நிற்கிறார்!

அதுமட்டுமல்ல, அவர் வேதாகமத்திலும் பெரியவர். யோவான் 5:39ல் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்: அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே. நித்திய ஜீவன் வேதாகமத்தின் பக்கங்களிலா உள்ளது?



பக்கங்களை எல்லாம் பக்காவாக அறிந்து வைத்திருந்தனரே வேதபாரகர்! ஏரோது கலங்கி யூதருக்கு ராஜா எங்கே பிறப்பார் என்ற கேள்விக்கு மீகா 5:2ஐ சுட்டிக் காண்பித்தனர்- மிகச் சரியாக! விடையும் தெரிந்தது! ஆனால் போய் பணிந்தார்களா? இல்லை! வேதாகமத்தை ஆராய்வது, படிப்பது, தியானிப்பது, மனனம் செய்வது, தேர்வு எழுதுவது, குறுக்கெழுத்துப் போட்டிகளில் பங்கு கொள்வது எல்லாம் நல்லது! ஆனால் வேதாகமங்கள் வெளிப்படுத்துகிற கிறிஸ்துவை, நித்திய ஜீவனை அளிக்கும் கிறிஸ்துவை நாம் கண்டுகொள்ளா விட்டால் அனைத்தும் வீண்!

வார்த்தை அச்சிடும் மையாக மாறவில்லை. வார்த்தை மாம்சம் ஆனது (வாக்கு மனிதர் ஆனார்) பக்கம் அல்ல, நபர்; ஆமாம் கிறிஸ்து. ஒரு இறை யியல் வல்லுநர் இவ்வாறு கூறினார் "வேதாகமம் தான் மனிதனுக்கும் கடவுளுக்குமான பாலம்" இது சரியா? 1 தீமோ 2:5ல் "**தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. என்பதின் படி கிறிஸ்து தான் ஒரே பாலம். எனவே தான் பவுல் கிறிஸ்துவை 'சொல்லி முடியாத தேவனுடைய ஈவு"** (2 கொரி 9:15) என்று கூறுகின்றார்.

தேவாலயத்திலும் பெரியவர்! வேதாகமத்திலும் பெரியவர்! நமது சடங்காச் சாரங்களிலும் பெரியவர்! நாம் கிறிஸ்துவின் மேலுள்ள பற்றை, அன்பை வெளிப்படுத்த உதவுபவை சடங்குகளும், பாரம்பரியங்களும். உள்ளான அன்பை வெளிப்பிரகாரமாய் காண்பிக்க உதவுபவை. ஆனால் கிறிஸ் துவை விட அவைகள் பெரியவைகளாய் மாறினால் ஆபத்து! அவைகள் நம் வாழ்வின் மையத்தில் வைக்கப்பட்டால் சுற்றளவும் பாதிக்கும். கலாத்தியர் 6:15ல் கிறிஸ்து இயேசுவுக்குள் விருத்தசேதனமும் ஒன்றுமில்லை. விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுமில்லை. புது சிருஷ்டியே காரியம் என்று பவுல் கூறுகிறார். புதிய படைப்பாவதே இன்றியமையாதது. அதை அருளுவது கிறிஸ்துதான்! ஞானஸ்நானம் நல்லது தான். ஆனால் தண்ணீரின் அருகிலே, நதியண்டையிலே அதிக நேரம் நின்றால் கிறிஸ்து கடந்து சென்றுவிட்ட இடத்தில் வறண்ட ஆறுகளை மட்டுமே

**வேதாகமங்கள் வெளிப்படுத்துகிற கிறிஸ்துவை நித்திய ஜீவனை அளிக்கும் கிறிஸ்துவை நாம் கண்டுகொள்ளா விட்டால் அனைத்தும் வீண்!**






நீங்கள் காண்பீர்கள். திருவிருந்து அருமையானது தான்! ஆனால் அது கிறிஸ்துவுக்கு முன் வந்து விட்டால் அது குழுக்களை பிரிக்க ஆரம்பிக்கிறது. கிறிஸ்துவுடனும், கிறிஸ்துவை சேர்ந்த அனைவருடனும் ஒற்றுமையை ஏற்படுத்தினால் அது ஒரு அழகிய சாக்கிரமந்து.

இப்புதிய ஆண்டில் கிறிஸ்துவை நம் வாழ்வின் மையம் ஆக்குவோம். கிறிஸ்து மையம் இல்லையென்றால் நம் விசுவாசம் பிரச்சனைகளை சந்திக்கும் போது வற்றி, தீர்ந்து விடும். கிறிஸ்துவில் துவங்கினால் நம் வாழ்வின் சுற்றளவு எல்லையற்றது, முடிவற்றது, வரம்பற்றது. அவர் மையம் என்றால் 1 பேதுரு 2:9ல் உள்ளபடி அவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படி தான் அவர் நம்மை அவருக்கு உரிமைச் சொத்தாக மாற்றியுள்ளார் என்பதை புரிந்துகொள்ள முடியும். செயல்படுத்தவும் முடியும்.

தேவாலயத்திலும், வேதாகமத்திலும், சடங்காச்சாரங்களிலும் விசுவாசத்திலும், சபையிலும் பெரியவரான கிறிஸ்துவை நம் வாழ்வின் மையம் ஆக்குவோம்! எல்லையற்றை சுற்றளவில் வாழ்வோம்!

அடுத்த முறை சிலந்தி வலையைக் கவனித்துப் பாருங்கள்! வலையில் சிலந்து எங்கு உள்ளது என்று கவனியுங்கள்! எப்பொழுதும் மையத்தில் தான் இருக்கும்! உணவு கிடைத்தாலும், வலையின் ஓரம் சென்று சாப்பிட்ட பின் மீண்டும் மையமே! சிலந்தி புரிந்து கொண்டதோ!



**அருட்திரு.**
**Rev.Dr.S. வாட்சன் செல்வசிங்**
நிர்வாக இயக்குனர்,
சபை வளர்ச்சி மையம், சென்னை-52.

# திருப்புமுனை



என் பெயர் ஷீபா பிரஹதி, நான் என் பெற்றோர் மற்றும் எனது தங்கையுடன் சென்னையில் வசித்து வருகிறேன். நான் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து வளர்ந்தேன். சிறு வயதில் என் பாட்டி வேதத்திலிருந்து கூறும் உண்மை சம்பவங்களின் மூலம் இயேசுவைப் பற்றி அறிந்து கொண்டேன். இயேசு என்னை நேசிக்கிறார் எனக்காக மரித்தார் என்ற சத்தியம் என் இதயத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டது. திருச்சபைக்கும், ஓய்வுநாள் பள்ளிக்கும் வாரந்தோறும் தவறாமல் சென்றுவிடுவேன். நல்ல அன்பான குடும்பச் சூழல், நல்ல நண்பர்கள் என இருந்த மகிழ்ச்சியான என் வாழ்க்கை திடீரென்று மாறத்துவங்கியது.

நான் 12-ம் வகுப்பு படிக்கும்போது எனக்குள் அநேக குழப்பங்கள் ஏற்பட்டது, பயம் என்னைச் சூழ்ந்திருந்தது, இயேசுவை விட்டு தூரம் இருப்பது போல் இருந்தது, வாழ்க்கை மிகவும் வெறுமையாய் இருந்தது போல் உணர்ந்தேன். அந்த தருணத்தில் தான் எங்கள் பள்ளியில் நடந்த ஒரு சிறப்பு ஜெபக்கூட்டத்தில் பரிசுத்த ஆவியானவரின் தொடுதலை உணர்ந்தேன். தேவன் என்னை மீண்டுமாய் அவரிடம் அழைத்தார். “அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்; ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக்கொள்ளுகிறேன்,” (எரேமியா 31: 3) என்ற வசனத்தின் மூலம் என்னிடம் பேசினார். அந்த தருணத்தில் தேவனின் அளவற்ற அன்பு என்னைச் சூழ்ந்துக் கொண்டது. என் இருதயத்தில் இருந்த வெறுமை நீங்கிவிட்டது.

**இளமை முதுமைக்கு முந்தியது!**

**திறமை பெருமைக்கு சாத்தியமானது!**

**தாழ்மை தேவனுக்கு பிரியமானது!**

சிறு வயதிலிருந்தே இயேசுவை அறிந்திருந்தாலும்கூட இந்தத் தருணத்தில் தான் அவரின் அன்பையும் வல்லமை யையும் முழுநிச்சயமாக உணர்ந்துக் கொண்டேன். இயேசுவை என் வாழ்வின் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டேன். என்னை இவ்வளவாய் நேசிக்கும் இயேசுவை பிறருக்கு கூறவேண்டும், அவர் எனக்கு அளித்த மகிழ்ச்சியை மற்றவர்களிடம் பகிர்ந்துக்கொள்ள வேண்டும் என்ற தாகம் ஏற்பட்டது. அதுமுதல் என்னால் இயன்றவரை என் நண்பர்களிடம் இயேசுவின் அன்பையும் அவர் என்வாழ்க்கையில் செய்த நன்மை களையும் சொல்லி வந்தேன்.

2016-ல் எங்கள் திருச்சபையில் விடுமுறை வேதாகமப் பள்ளி ஆசிரியராக சிறுவர்கள் மத்தியில் ஊழியம் செய்ய வாய்ப்புக் கிடைத்தது. அதனை தொடர்ந்து ஞாயிறு பள்ளி ஆசிரியராக கடந்த 9 வருடங்களாக ஊழியம் செய்ய தேவன் கிருபை பாராட்டியுள்ளார். அத்துடன் திருச்சபையின் மற்ற ஊழியங்களிலும் பங்குபெற்று வருகிறேன். மத்தேயு 12:20 “நெரிந்தநாணலை முறிக்கா மலும், மங்கி எரிகிற திரியை அணைக்காமலும் இருப்பார்,” என்ற வார்த்தையின் படி தேவன் என்னை தம்முடைய ஊழியத்தில் பயன்படுத்தி வருகிறார்.

**‘கரையேறி உமதண்டை நிற்கும்போது ரட்சகா உதவாமல் பலனற்று வெட்கப்பட்டுப் போவேனோ ஆத்மா ஒன்றும் இரட்சிக்காமல் வெட்கத்தோடு ஆண்டவா வெறுங்கையனாக உம்மைக் கண்டுகொள்ளல் ஆகுமா‘**

இந்த பாடலின் வரிகள், அழிந்து போகும் அநேக ஆத்துமாக்களை தேவனிடத்தில் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்தை என் இருதயத்தில் உருவாக்கியது. அதின் விளைவாக நான் ஒரு தற்கொலை தடுப்பு மையத்தில் தன்னார்வலராக இணைந்து, தற்கொலை முயற்சி செய்யும் மக்க ளுக்கு ஆலோசனை வழங்கி வந்தேன். ஜெபத்தோடு அத்தகைய மக்களுக்கு ஆலோசனை வழங்கும் போது, தேவன் அவர்கள் வாழ்வில் கிரியை செய்வார் என்ற விசுவாசத்துடன் இதனை செய்து வருகிறேன்.

**இளமையும் திறமையும் இயேசுவுக்கு தானமானால் முதுமையில் மன நிறைவிருக்கும் மறுமையில் தேவ கனமிருக்கும்!**



2023-ல் என் வாழ்வை குலுக்கிய ஒரு சம்பவம் நடைபெற்றது. நான் வேலை பார்த்துக்கொண்டு இருந்த பள்ளியில் எனக்கு ஒரு விபத்து ஏற்பட்டது. தேவன் என் உயிரை காப்பாற்றினார். அந்த சமயத்தில்தான் என் உயிர் உள்ளவரை அவரின் பணியை மாத்திரம் செய்ய வேண்டும் என்ற வாஞ்சை எனக்குள் வந்தது. என்னை அவர் சித்தத்தி ற்கு முழுமையாய் அர்ப்பணித்தபோது தேவன் என்னோடுகூட 1 பேதுரு 5:2-4 "உங்களிடத்தி லுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மே ய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறும ாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள். அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்," என்னும் வசனங் களின் மூலம் பேசினார். அவரின் அழைப்பை ஏற்று என்னை முழுநேர ஊழிய பணிக்கென்று ஒப்புக்கொடுத்தேன். ஒரு கிறிஸ்தவ இயக்கத்தில் இணைந்து பணி செய்யும் வாய்ப்பினைத் தேடத் துவங்கினேன்.

கடந்த மே மாதம் 2024 இல் இருந்து அனைவருக்கும் கிறிஸ்து ஊழியங்களின் சார்பு இயக்கமான பரிவர்த்தன் அறக் கட்டளையில் (Parivarthan Charitable Trust - PCT) இணைந்து அவரின் பணியை தொடர்ந்து செய்ய தேவன் கிருபை பாராட்டி யுள்ளார். உடைந்த பாத்திரமான என்னையும் கூட தேவன் உருவாக்கி பயன்படுத்தி வருகிறதற்காக அவரை ஸ்தோத்தரிக்கிறேன்.

**- ஷீபா பிரஹதி**

## PCT யில் தற்போது...

16 சிறுவர் கல்விப் பயிற்சி மையங்கள் 418 மாணவர்களைக் கொண்டு இயங்கி வருகின்றன.

இரண்டு தையல் பயிற்சி மையங்களில் 34 பெண்கள் கற்று வருகின்றனர்.

10,12 மற்றும் மேற்படிப்பிலிருக்கும் தேவைமிகு மாணவர்களுக்கும் நிதி உதவி செய்து வருகிறது.

பேரிடர் காலங்களில் அவசிய நிவாரணப் பணி மூலமாகவும் சேவை செய்கிறது.

# பரிவர்த்தன் அறக்கட்டளை

(Parivarthan Charitable Trust)

18/6, Narayanan Street, Ayanavaram, Chennai - 600 023

## அனைவருக்கும் கிறிஸ்து ஊழியங்கள்

- இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைக் கேள்விப்பட்டிராத மக்களைத் தேடிச்சென்று அவரது அன்பினைப் பறைசாற்றிட அனைவருக்கும் கிறிஸ்து ஊழியங்கள் உதயமானது.
- இன்றைய தினத்தில் (அக்டோபர் 2023) 159 மிஷனரிகளைக் கொண்டு 12 மாநிலங்களில் அருட்பணி ஆற்றுகிறது. 2025-ல் 300 மிஷனரிகள் எனும் தரிசனத்துடன் சுவிசேஷத்தைக் கூறி மக்களைத் திருச்சபையாக உருவாக்கி வருகிறது.

## பரிவர்த்தன் அறக்கட்டளை

- நமது நாட்டின் தற்போதைய சட்டப்படி அருட்பணியையும் சமுதாய மேம்பாட்டு பணிகளையும் சேர்த்து ஒரு சங்கத்தின் கீழ் செய்வதில் பல சட்ட சிக்கல்கள் இருப்பதால், சமுதாய மேம்பாட்டு பணிகளுக்கென்று பரிவர்த்தன் அறக்கட்டளை (Parivarthan Charitable Trust) பதிவு செய்யப்பட்டிருக்கிறது.
- தேவை நிறைந்த நமது பணித்தள கிராமங்களில் 53 சிறுவர் கல்வி பராமரிப்பு மையங்களை உருவாக்கி, 1,800 பிள்ளைகளுக்கு சீரான கல்வி, முறையான ஒழுக்கம், சுகாதாரம் முதலியன கற்றுக்கொடுத்து வருகிறது. தையல் பயிற்சி மையம், கணினி பயிற்சி மையம், முதியோர் கல்வித்திட்டம் போன்ற அமைப்புகளின் மூலம் சமுதாய மறுமலர்ச்சிக்கு பாடுபடுகிறது.
- தேசிய பேரிடர் நாட்களில் மக்களின் வாழ்வாதாரத்தின் தேவைகளையும் சந்தித்து வருகிறது.
- தேவனுடைய பெரிய கிருபையினால் 80G-ன் கீழ் வருமான வரிவிலக்கும்; இந்த ஊழியத்திற்கென்று நன்கொடை கொடுக்கும் உங்களுக்கு ஐம்பது சதவிகித வரிவிலக்கு சலுகையும் இருக்கிறது.
- தற்போது (அக்டோபர் 2023) 48 சமுதாய நலப்பணியாளர் இதில் பணி செய்கின்றனர்.
- சிறுவர்களைத் தாங்கும் மாதாந்திர உதவித் தொகை, சிறுவர் கல்வி பராமரிப்பு மைய ஆசிரியர்கள், பேரிடர் மீட்பு உதவி மற்றும் மேலே குறிப்பிட்டிருக்கும் அனைத்து சமுதாய மேம்பாட்டு பணிகளுக்கான நன்கொடைகளையும் **"பரிவர்த்தன் அறக்கட்டளை"** என குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.
- வருமானவரி கட்டும் விசுவாச நண்பர்களையும் இதற்கு அறிமுகப்படுத்துங்கள்.
- இதன் மூலம் நிறைவேற்றப்படும் சேவைகளின் வாயிலாக சமுதாய மறுமலர்ச்சி எனும் நமது தரிசனம் நிறைவேற ஜெபிக்கவும், வலக்கரம் நீட்டித் தாங்கவும் வேண்டுகிறோம்.

| Rev. R. John kirubakaran | Mr. A.R. Ronald Amirtharaj | Mr. K. Solomon |
|---|---|---|
| President | Treasurer | Secretary |

***Bank Account details :*** A/c. Name: PARIVARTHAN CHARITABLE TRUST
Bank Name: STATE BANK OF INDIA | Branch Name: Ayanavaram
AC. No. 39501908378 | IFSC: SBIN0002202 (*Income Tax Excemption Details:*
80G. No. AAETP3903FF20206 U/S 80G (5) (iv) (12) valid up to A. Year 2023-24).

# அழகிய பாதங்கள்



தேவன் என்னை தமது அற்புதமான ஊழியத்திற்கென்று தெர்ந்தெடுத்ததற்காக அவருக்கு நன்றிகளை செலுத்துகிறேன். என் பெயர் பிரஜ்ராஜ் சிங். நானும் எனது பெற்றோரும் லகிம்பூர், உத்தர பிரதேசத்தில் வசித்து வந்தோம். அப்பொழுது எங்களுக்கு இயேசுவைப் பற்றித் தெரியாது. நான் ஒரு இந்து குடும்பத்தில் வளர்ந்தேன். என் பெற்றோர் தீவிரமான இந்து பக்தர்கள். என்னை சிறு வயதிலிருந்தே அநேக கோவில்களுக்கு அழைத்துச் சென்றனர். அங்கு நாங்கள் கைகளை கூப்பியவாறு இந்து தெய்வங்களை வணங்கியும், ஆராதித்தும், பூஜைகள் செய்தும் வந்தோம். அதிக தெய்வ பக்தியுடன் வாழ்ந்த போதிலும் எங்கள் குடும்பத்திலும் எனது வாழ்விலும் சமாதானமே இல்லை. அந்தச் சமயத்தில் நான் கெட்ட நண்பர்களுடன் சேர்ந்து மது அருந்துவது, புகை பிடிப்பது, சண்டை போடுவது, மற்றவர்களிடம் வாக்குவாதம் செய்வது போன்ற அனைத்து கெட்ட பழக்கங்களையும் வளர்த்துக் கொண்டேன். இந்த கெட்ட பழக்கங்களால் நான் யாருக்கும் பயப்படமாட்டேன், எல்லா பாவ காரியங்களிலும் ஈடுபட்டு வந்தேன். என்னை நினைத்து என் குடும்பம் மிகவும் வருத்தத்துடன் இருந்தார்கள். என் வாழ்க்கை இப்படி இருந்தபோது என் பெற்றோர் ஒரு பெண்ணை எனக்கு திருமணம் செய்து வைத்தார்கள். திருமணத்திற்குப் பின்னும் என் வாழ்க்கை நன்றாக அமையவில்லை. இன்னும் மோசமான நிலைமைக்குச் சென்று விட்டது. என் மனைவியும் மகிழ்ச்சியாக இருக்கவில்லை, அவளும் என்னை திருமணம் செய்து கொண்டதால் துக்கத்துடனும் துயரத்துடனும் காணப்பட்டாள். என்

வீட்டிற்கு பல முறை போலீசார் வந்து என்னை கைது செய்தனர், அதனால் என் பெற்றோர்கள் கலக்கமடைந்தனர். ஆகையால் எங்கள் சொந்த ஊரை விட்டு விட்டு என் மாமனாரின் வீட்டிற்கு சென்று விட்டோம். பல வருடங்கள் அங்கு வசித்து வந்தோம். எங்களுக்கு குழந்தை இல்லாததால் மிகவும் அவதிப் பட்டோம். பல மருத்துவர்களை சந்தித் தும், மருந்து மாத்திரைகளை உட் கொண்டும்கூட எந்தவித பயனும் இல்லை. மருத்துவர்கள் எங்களுக்கு அநேக ஆலோசனைகளை கொடுத்தாலும் அவைகள் அனைத்தும் வீணாகி விட்டது.

ஒரு நாள் எங்கள் வீட்டிற்கு ஒரு சகோதரி வந்தார்கள், என் மனைவியிடம் பக்கத்து கிராமத்தில் ஒரு ஜெபக் கூட்டம் நடப்பதாகவும், அங்கு சென்றால் எல்லா வித கெட்ட பழக்கங்களில் இருந்தும் உன் கணவருக்கு விடுதலை கிடைக்கும், நல்ல வேலைக்கு செல் வார்; மேலும், குழந்தை பாக்கியமும் கிடைக்கும் என்றும் கூறினார்.

என் மனைவியும் அந்த சகோதரியுடன் ஜெபக் கூட்டத்திற்குச் சென்றாள். திரும்பி வந்தவுடன் அங்கு நடைபெற்ற அனைத் தையும் எனக்குக் கூறினாள். அடுத்த முறை அங்கு செல்லும்போது என்னை யும் அழைத்துச் சென்றாள்.

இரண்டு மூன்று மாதங்கள் நான் தொடர்ந்து அந்த ஜெபத்திற்குச் சென் றேன். அங்கு நடப்பது எதுவும் எனக்கு புரியாது, மக்களுக்கு பின்னால் நின்று கொண்டு கவனித்து கொண்டிருப்பேன். ஒருநாள் ஒரு தேவமனிதர் என்னைப் பார்த்து நீங்கள் ஏன் கடைசியில் நின்று கொண்டிருக்கிறீர்கள்? என்று கேட்டு, என் அருகில் வந்து என் தலையின் மேல் கைவைத்து எனக்காக ஜெபித் தார். அந்தத்தருணத்தில் என் உடல் முழுவதும் அதிரத்துவங்கியது, யாரோ என் பாரங்கள் அனைத்தையும் எடுத்து கொள்வது போல் உணர்ந்தேன்; எனக் குள் விசுவாசம் வந்தது. தேவன் என் னோடு பேசினார். என் உடலையும் உள்ளத்தையும் தொட்டு என்னுடைய எல்லா பாவத்தையும் மன்னித்து என்னை மாற்றி விட்டார். நான் இயேசுவை அறிந்து கொண்டேன். அவரை என் வாழ்வின் சொந்த இரட்ச கராக ஏற்றுக்கொண்டேன். நான்



தொர்ந்து ஜெபிக்க ஆரம்பித்தேன். தேவன் என் எல்லா வேண்டுதல்களுக்கும் பதிலளித்தார். எனக்கு ஒரு குழந்தை தருமாறு தேவனிடத்தில் கேட்டேன். திருமணமாகி எட்டு வருடங்களுக்கு பின் என் மனைவிக்கு ஒரு அழகிய ஆண் பிள்ளை பிறந்தது. நானும் என் குடும்பமும் இப்பொழுது கர்த்தருடைய பெரிதான கிருபையால் மகிழ்ச்சியாக இருக்கின்றோம். என் மனைவியின் பெயர் : பூனம். எங்களுக்கு ஸ்டீபன், விஷ்வாஸ் மற்றும் திஷா என்னும் 3 குழந்தைகள் உள்ளனர்.

நான் 19.02.2012-ல் திருமுழுக்கு எடுத்தேன். கர்த்தர் எனக்கு அவருடைய ஊழியத்தை செய்ய பாரத்தை கொடுத்ததினால், ஒரு போதகருடன் இனணந்து ஊழியம் செய்யத் துவங்கிய நான், கடந்த 2 வருடங்களாக அனைவருக்கும் கிறிஸ்து ஊழியங்களில் இணைந்து லக்கீம்புர் மாவட்டத்தில் உள்ள சைதாப்பூர் என்னும் பணித்தளத்தில் குடும்பமாக ஊழியம் செய்து



வருகிறோம். தற்போது 10 கிராமங்களில் உள்ள அவாதி, போஜ்புரி, சாமதுழிஷர் என்னும் இன மக்களுக்கு சுவிசேஷம் அறிவித்து வருகிறேன் இப்பொழுது இங்கு ஏறக்குறைய 200 விசுவாசிகள் உள்ளனர் அதில் 62 பேர் திருமுழுக்கு எடுத்துள்ளனர். 1 இடத்தில் ஞாயிறு ஆராதனையும், 6 இடங்களில் ஜெபக் கூடுகைகளையும் நடத்த தேவன் கிருபை பாராட்டியுள்ளார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

**- பிரஜ்ராஜ் சிங்**

## உத்திரப் பிரதேசம்

| | |
|---|---|
| தலைநகர் | : **பிரயாக்ராஜ் (அலகாபாத்)** |
| மக்கள் தொகை | : **24.10 கோடி** (2021) |
| மாவட்டம் | : **71** |
| கிராமம் | : **1,06,774** |
| மொழி | : **ஹிந்தி** |
| கிறிஸ்தவர்கள் | : **0.18%** (2011) |

## ஜெபியுங்கள்

① நமது ஊழியர்களை ஆண்டவர் வல்லமையாய் பயன்படுத்தி, அற்புத அடையாளங்கள் மூலமாக தேவன் தமது வார்த்தையை உறுதிப்படுத்த.

② சிறுவர் பயிற்சி வகுப்புகள் அநேக இடங்களில் ஆரம்பிக்கப்பட.

③ மத விரோத சக்திகளால் மிஷனரிகள் எதிர்கொள்ளும் எதிர்ப்புகள் மத்தியிலும் ஆண்டவர் அவர்களை பாதுகாத்து பயன்படுத்த.



### இந்திய தேசத்திற்காக
# மன்றாடுவோம் வாருங்கள்!

**தேவன் நமது பணித்தளங்களில் செய்கிற கிரியைகளை சொல்லி துதிக்கவும், ஜெபிக்கவும் குறிப்புகளைக் கொடுத்துள்ளோம். அனுதினமும் உங்கள் தனி, குழு மற்றும் குடும்ப ஜெபத்தில் பயன்படுத்துங்கள்!**

## உத்தரகாண்ட்

நாள் 01

பாஸ்பூர்,
உதம்சிங்நகர்
மாவட்டம்
தினேஷ்ராஜ்
& ரூபி

### துதிக்க

- 165 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டதில் 15 பேர் கிறிஸ்துவின் அன்பிற்கு தங்கள் வாழ்வை ஒப்படைத்திருப்பதற்காக;
- சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்போர் சிலவேலைகளில் கிறிஸ்துவின் அன்பில் இழுக்கப்படுகின்றனர்.
- 29 வயதாகும் தீபாகவுரை தேவன் பிசாசின் பிடியினால் உண்டான வேதனையிலிருந்து விடுவித்து காத்ததற்காக;

### ஜெபிக்க

- திருமுழுக்கு ஆராதனை நடத்துவதற்கு எதிராக எழும்பும் தடையை தேவன் மாற்றி விசுவாசிகள் தடையின்றி திருமுழுக்கில் கலந்துகொள்ள;
- கிராமங்கள்தோறும் நாங்கள் எதிர்கொள்ளும் எதிர்ப்பை எதிர்கொள்ள தேவன் எங்களுக்கு ஞானம் அருள;

நாள்
02

கதர்பூர், உதம்சிங் நகர் மாவட்டம்
ராஜீவ் & ரேக்கா

## துதிக்க

- ஆகாஷ்-சிவானி தம்பதியினருக்கு தேவன் அழகான ஆண் குழந்தையைக் கொடுத்து ஆசீர்வதித்திருப்பதற்காக;
- 166 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதில் 14 பேர் அந்த வார்த்தைக்கு செவிசாய்த்திருப்பதற்காக;

## ஜெபிக்க

- கான்பூர் என்ற புதிய கிராமத்தைத் தெரிந்தெடுத்து, சுவி சேஷத்தை அக்கிராமத்திற்கு கொண்டுசேர்க்க மேற்கொள் ளப்படும் முயற்சியை தேவன் வாய்க்கப்பண்ண;
- சிறுவர் பயிற்சி மையத்தில், சிறுவர்களுக்கு கிறிஸ்துவின் அன்பு கதைகள் மூலம் அறிவிக்ககப்படுகிறது. தேவன் அவர்கள் உள்ளத்தில் கிரியை செய்ய;

---

நாள்
03

செலாக்கி, டெகராடூன் மாவட்டம்
கைலாஸ் வர்மா & கீதா

## துதிக்க

- 178 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதில் மூன்று பேர் கிறிஸ்துவின் அன்பிற்கு தங்கள் வாழ்வை அர்ப்பணித்தி ருப்பதற்காக;
- மதத் தீவிரவாதிகளால் எதிர்ப்பு அதிகமாய் இருந்தபோதும் ஜஸ்வீர் குடும்பத்தினர் தைரியமாய் கிறிஸ்துவை அறிக்கை யிட்டு விசுவாசத்தில் உறுதியாயிருப்பதற்காக;

## ஜெபிக்க

- குடிப் பழக்கத்திற்கு அடிமையாய் இருக்கும் சொ்வனையும், ஆறுமாத காலமாக கால் வலியினால் அவதிப்படும் சிறுவன் சிவான்ஸையும் கர்த்தர் விடுவிக்கும்படி;
- சுவிசேஷத்தை கேட்ட ராமுவும், அவரது குடும்பத்தினரும் மனம்மாறி கிறிஸ்துவுக்கு தங்கள் வாழ்வை அர்ப்பணிக்க;

---

நாள்
04

பர்ஹனி, உதம்சிங் நகர் மாவட்டம்
நித்தின் தாமஸ் & ஆஷா தாமஸ்

## துதிக்க

- 170 பேருக்கு கிறிஸ்துவின் நற்செய்தி அறிவிக்கப்பட்டதில் பத்து பேர் கிறிஸ்துவின் மேலுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டிருப்பதற்காக;
- கிராமங்கள்தோறும் ஊழியத்திற்கு கடுமையான எதிர்ப்பு நிலவி வந்தாலும், புதிய குடும்பங்கள் சுவிசேஷத்திற்கு ஆர்வமாய் செவிகொடுப்பதற்காக;

## ஜெபிக்க

- ✶ சுவிசேஷத்தை ஆர்வமாய் கேட்டிருக்கம் சகோ. குல்ஜட் குடும்பத்தினர் போன்ற அநேகர், அந்த மெய் சுவிசேஷத்திற்கு தங்கள் வாழ்வை அர்ப்பணிக்க;
- ✶ வீடுகள்தோறும் நடைபெறும் கூடுகையில் அநேகர் தைரியமாய் கலந்துகொண்டு கிறிஸ்துவின் அன்பில் வேரூன்றவும், கனியுள்ள வாழ்க்கை வாழவும்;

---

நாள்
05

சஹாஸ்பூர்,
டெகராடூன் மாவட்டம்
நரேஷ் நைனிவால்
& சோனா

## துதிக்க

- ✪ 114 பேருக்கு கிறிஸ்துவின் அன்பு பகிர்ந்தளிக்கப்பட்டதில், 13 பேர் கிறிஸ்துவுக்கு தங்கள் வாழ்வை அர்ப்பணித்திருப்பதற்காக;
- ✪ 36 வயதாகும் சுனிலுக்கு சுவிசேஷம் அறிவித்து, பின்தொடர் பணி செய்ததின் விளைவாக அவர் இப்போது இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளார்;

## ஜெபிக்க

- ✶ போக்ஷா, சீக், போஜ்புரி, நேபாளி, கர்வாலி, குமௌனி மக்கள் மத்தியில் நடைபெறும் சுவிசேஷ படைமுயற்சி வெற்றிபெற;
- ✶ சுவிசேஷத்தை தைரியமாய் சொல்லமுடியாத நிலை உள்ளது. ஆனாலும் தனித்தனி நபர்களை சந்தித்து அறிவிக்கப்படும் சுவிசேஷம் நல்ல பலன்தர;

## இனிய இல்லறம்

சுபாஷ் வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பில் இருப்பதை தெரிந்த அவரது மனைவி தற்கொலை செய்துகொள்ளும் அளவிற்கு துணிந்துவிட்டார். எதிர்பாராமல் சுபாஷ் நமது ஆராதனையில் கலந்துகொண்டார். ஆராதனை முடிந்தபின் அவருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. தனது தவறை உணர்ந்தார் சுபாஷ். அவருக்கும் அவரது மனைவிக்கும் ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. இப்பொழுது குடும்பமாக மகிழ்ச்சியுடனும், சாட்சியாகவும் வாழ்ந்துவருகின்றனர். சமாதானம் ஓதும் இயேசு கிறிஸ்து இவர்தான். – பஹவான்புரா, மத்தியப்பிரதேசம்

நாள் 06

சலீம்பூர்,
ஹரிதுவார் மாவட்டம்
அருண்குமார் &
காஜல்

### துதிக்க

- 149 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதில் 8 பேர் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுகொண்டிருப்பதற்காக;
- ரோசனாபாத் கிராமத்தின் நீட்டு சுவிசேஷத்திற்கு ஆரம்பத்தில் எதிர்ப்பு தெரிவித்தாலும் இப்போது கிறிஸ்துவின் அன்புக்கு குடும்பமாக அர்ப்பணித்திருப்பதற்காக;

### ஜெபிக்க

- ஹரிதுவாரைச் சுற்றியுள்ள பகுதிகளில் நிலவிவரும் எதிர்ப்பின் மத்தியிலும் அநேகர் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள ஆர்வம் காண்பிப்பதற்காக;
- ஊழியர்கள் மீதும், விசுவாசிகள் மீதும் ஆண்டவரது வல்லமை அளவில்லாமல் ஊற்றப்பட்டு, அவருக்காக சாட்சியாய் வாழ;

---

## உத்திரப் பிரதேசம்

நாள் 07

மமனியா, மிர்சாபூர்
மாவட்டம்
பப்லு & சன்சலா

### துதிக்க

- சர்க்கரை வியாதியினால் மிகவும் கஷ்டப்பட்ட சகோதரி பூணத்திற்காக தொடர்ந்து ஜெபித்து வருவதால் சரீரத்தில் நல்ல முன்னேற்றம் காணப்படுவதற்காக;
- கிறிஸ்தவத்திற்கு எதிர்ப்புகள் அதிகமாக இருந்தாலும் தேவன் தமது சிறகுகளால் விசுவாசிகளை காத்து வருவதற்காக;

### ஜெபிக்க

- இம்மாதம் குறைந்தது 120 பேருக்காவது சுவிசேஷம் அறிவிக்கப்படவேண்டும் என்ற இலக்கை எட்டிப்பிடிக்க;
- புதிய கிராமங்களில் ஆராதனை துவங்கப்பட மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சியை தேவன் வாய்க்கப்பண்ண;

---

நாள் 08

ரொஹிலா,
சீத்தாபூர் மாவட்டம்
ரஜினீஷ் குமார்

### துதிக்க

- 100 பேருக்கு கிறிஸ்துவின் நற்செய்தி பகிர்ந்தளிக்கப்பட்டதில், 20 பேர் கிறிஸ்துவின் அன்புக்கு தங்கள் வாழ்வை அர்ப்பணித்திருப்பதற்காக;
- நோய்ப் படுக்கையில் இருந்த அனுஷ்க்கு சுவிசேஷம் அறிவித்து ஜெபித்தபோது தேவன் சுகம் அருளியிருப்பதற்காக;

## ஜெபிக்க

- ✶ இம்மாதத்தில் குறைந்தது 120 பேருக்காவது கிறிஸ்துவின் நற்செய்தி அறிவிக்கவேண்டும் என்ற திட்டம் கைகூட;
- ✶ பார்வைத்திறன் குறைந்து அவதியுறும் சட்ரகனின் கண்ணை தேவன் தொட்டு சுகப்படுத்த;

---

**நாள் 09**

இம்லியாகலான்,
மிர்ஸாபூர் மாவட்டம்
ராஜேந்திரா பிரசாத் & மீனா தேவி

## துதிக்க

- ✪ 40 பேருக்கு சுவிசேஷம் அறிவித்து, 7 பேரை கிறிஸ்துவுக்கென்று ஆதாயம் செய்ய தேவன் கொடுத்த கிருபைக்காக;
- ✪ இரண்டு வருடங்களுக்கும் மேலாக சுவாசப் பிரச்சனையினால் கஷ்டப்பட்ட சரோஜாவுக்காக விசுவாசிகள் ஒன்றிணைந்து ஜெபித்தபோது தேவன் கொடுத்த சுகத்திற்காக;

## ஜெபிக்க

- ✶ மதமாற்றத் தடைச்சட்டம் நடைமுறையில் இருப்பதால், விசுவாசிகள் தைரியமாய் திருமுழுக்கு எடுக்கமுடியாதபடி தவிக்கும் நிலை மாற;
- ✶ ஐந்து பேர் திருமுழுக்கு எடுக்க முன்வந்துள்ளனர். அவர்களுக்கு தைரியத்தையும், விசுவாசத்தையும் தேவன் கட்டளையிட;

---

**நாள் 10**

ஜெகதீஸ்பூர்,
சந்தௌலி மாவட்டம்
தாவீது & ஜெமிமா

## துதிக்க

- ✪ 90 பேருக்கு சுவிசேஷம் பகிர்ந்தளிக்கப்பட்டதில் 20 பேர் கிறிஸ்துவின் விசுவாசத்திற்குள் வந்திருப்பதற்காக;
- ✪ பிரசவத்தின்போது மருத்துவர்கள் கண்டிப்பாக அறுவைசிகிட்சை செய்யவேண்டும் என்றபோதும், விசுவாசிகளின் தொடர் ஜெபத்தினால் விசுவாசி விமலா அறுவைசிகிட்சையின்றி குழந்தை பெற்றெடுத்திருப்பதற்காக;

## ஜெபிக்க

- ✶ திருமுழுக்கிற்கு ஆயத்தமாயிருக்கும் 20 பேரும் விசுவாசத்தில் நிலைத்திருந்து, திழுமுழுக்கில் பங்குபெற;
- ✶ திருமணமாகி 15 வருடங்களான கிர்தாரி தம்பதியருக்கு தேவன் குழந்தை பாக்கியத்தைக் கட்டளையிட;

## துதிக்க

**நாள் 11**

சய்தாபூர், லக்கீம்பூர்
கேரி மாவட்டம்
பிரிஜ்ராஜ் சிங்
& பூனம்

- ✪ 120 பேருக்கு கிறிஸ்துவின் நற்செய்தி அறிவிக்கப்பட்டதில் 15 பேர் விசுவாசத்திற்குள் வரவும், இரண்டு பேர் திரு முழுக்கு எடுக்கவும் தேவன் கிருபை செய்ததற்காக;
- ✪ அஜய் மற்றும் ராஜ்குமார் கடந்தமாதத்தில் தங்கள் வாழ்வில் தேவன் செய்த செயல்களை பகிர்ந்து கொண்டதினால் புதிய விசுவாசிகள் விசுவாசத்தில் பெலப்பட்டிருப்பதற்காக;

## ஜெபிக்க

- ✶ இந்த மாதத்தில் குறைந்தது 200 பேருக்காவது சுவிசேஷம் அறிவிக்கப்படவும், குறைந்தது பத்து பேராவது திருமுழுக் குப் பெறச்செய்வதற்காகவும்;
- ✶ ஜேன் கிராமத்தில் புதிய ஆராதனைக்குழு துவங்கப்பட எடுக்கப்படும் முயற்சியை தேவன் கைகூடிவரப்பண்ண;

---

## துதிக்க

**நாள் 12**

கைசரிகஞ்ச்,
சீத்தாபூர் மாவட்டம்
சியாம் கிசோர் &
ரேனி தேவி

- ✪ பாய் சந்துவைக் கஷ்டப்படுத்திய பிசாசின் பிடியிலிருந்து விசுவாசிகளின் ஜெபம் அவரை விடுவித்ததற்காக;
- ✪ மூன்று புதிய கிராமத்தை சந்தித்ததில், 108 பேருக்கு சுவி சேஷம் அறிவிக்கப்பட்டது. 10 பேர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர்.

## ஜெபிக்க

- ✶ அடிக்கடி வியாதிப்படும் சகோதரி மீனா தேவிக்கு இருக்கும் தீராத வயிற்று வலியிலிருந்து தேவன் சுகம் அருள;
- ✶ வயிற்றுப் பகுதியில் உள்ள புற்றுநோயால் அவதிப்படும் ஜெகஜீவனை ஆண்டவர் சுகப்படுத்த;



**CSI கிறிஸ்து ஆலயம், பண்ணைவிளை பங்களா**
**தூத்துக்குடி மாவட்டம்**

**15.1.2025** பொங்கல் விடுமுறை (புதன்கிழமை)
**9:30 am - 4:00 pm**

இரு வட இந்திய மிஷனரிகள் பிரதிஷ்டை செய்யப்படவிருக்கின்றனர். தொடர்பு: 88709 82276

**ஜெபிக்கவும், பங்குபெறவும் அன்புடன் அழைக்கிறோம்**

# பஞ்சாப்

## துதிக்க

நாள்
13

சக் சிக்கந்தர்,
அம்ரித்சர் மாவட்டம்
தீபக் ராஜ்வன்ஸ்
& ரமன்தீப் கவுர்

- சக் சிக்கந்தரில் அழகான ஆலயம் ஒன்று கட்டிமுடிக்கப்பட்டு தேவனுடைய பிள்ளைகளின் பயன்பாட்டிற்கென்று பிரதி ஷ்டை செய்யப்பட்டதற்காக;
- பிசாசின் தொந்தரவினால் சமாதானம் இழந்து காணப்பட்ட கோமலின் குடும்பத்தில் தேவன் கிரியை செய்ததினால் இப்போது பிசாசு தொந்தரவு இல்லாமல் குடும்பத்தினர் மகிழ்ச்சியாய் உள்ளனர்;

## ஜெபிக்க

- விபத்தைச் சந்தித்ததில், கால் மற்றும் இடுப்பு பகுதியில் பெரிய காயங்கள் அடைந்திருக்கும் சோனுவுக்கு தேவன் சுகம் தந்து, விரைவில் எழுந்து நடக்க;
- குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி இருக்கும் மங்காவினால் அவதிப்படும் அவரது குடும்பத்தினரின் ஜெபத்தைக் கேட்டு தேவன் அவரை விடுவிக்க;

---

# ஹரியானா

## துதிக்க

நாள்
14

பெகோவா,
குருஷேத்ரா மாவட்டம்
சரத் சந்திர டிகல் &
லவ்லி நாயக்

- மொஹாம்பூர் என்ற புதிய கிராமத்திற்கு சென்று கிறிஸ்து வின் அன்பை அறிவிக்க தேவன் உதவி செய்ததற்காக;
- சிறுநீரகப் பிரச்சனையிலிருந்து சகோ. காலாவையும், வயிற்று வலியிலிருந்து சகோதரி நீலத்தையும் ஆண்டவர் சுகப்படுத்தியிருப்பதற்காக;

## ஜெபிக்க

- ஹர்நேக்கா கிராமத்தில் பின்மாற்றம் அடைந்திருக்கும் மம்தா மற்றும் பூஜா என்ற இரண்டு சகோதரிகளும் திரும் பவும் கிறிஸ்துவின் அன்பின் வளையத்திற்குள் வர;
- பல்பால் மற்றும் ஜின்ட் என்ற இரண்டு கிராமத்திற்கும் சுவிசேஷத்தை எடுத்துச்செல்ல எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெற;

## துதிக்க

நாள் 15

சாஹாபாத்,
குருஷேத்ரா மாவட்டம்
சுக்தேவ் சிங்
& சுமன்

- ✪ திருமணமாகி ஆறு வருடத்திற்குப் பின் சகோதரி ஆர்த்திக்கு ஆண்டவர் குழந்தை பாக்கியத்தைக் கட்டளையிட்டிருப்ப தற்காக;
- ✪ ஆறு கிராமங்களைச் சந்திக்கவும், 62 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கவும், ஏழு பேர்களை கிறிஸ்துவின் சீடர்களாய் மாற்றவும் தேவன் உதவி செய்ததற்காக;

## ஜெபிக்க

- ✶ கடந்த எட்டு மாதங்களாக கணவனையும், மூன்று பிள்ளை களையும் விட்டுப் பிரிந்து சென்றிருக்கும் சகோதரி மோகேஷ் திரும்பி வந்து குடும்பத்துடன் வாழ;
- ✶ பிசாசின் பிடியிலிருந்து சட்மோனையும், கடுமையான தலை வலியிலிருந்து மகேந்திரனையும் ஆண்டவர் விடுவிக்கும் படி;

---

# ராஜஸ்தான்

## துதிக்க

நாள் 16

குண்டல்,
பிரதாப்கட் மாவட்டம்
ஈஸ்வர்லால்
& சங்கிலா

- ✪ இம்மாதத்தில் கிறிஸ்துவின் அன்பை ஏற்றுக்கொண்டி ருக்கும் 11 விசுவாசிகள் திருமுழுக்கு எடுக்க ஆயத்தமாக இருப்பதற்காக;
- ✪ வயிறு பெரிதாக வீக்கங்கண்டு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்த மகிபாலுக்காக சபையார் ஊக்கமாய் ஜெபித்தபோது தேவன் கொடுத்த சுகத்திற்காக;

## ஜெபிக்க

- ✶ கடந்த ஒரு வருடமாக பிசாசின் பிடியில் சிக்கித் தவிக்கும் சாகா பென்-ஐ தேவன் விடுவித்து அவரது குடும்பத்திற்கு மகிழ்ச்சியைக் கொடுக்க;
- ✶ ஆலயத்திற்குத் தேவையான மேஜை, நாற்காலி, ஒலிபெருக்கி ஆகியவை சரியான நேரத்தில் கிடைக்கவும், சுதந்திரதோடு விசுவாசிகள் கர்த்தரை ஆராதிக்கவும்;

**நாள் 17**

தாண்டிஓப்ரி,
டுங்கர்பூர் மாவட்டம்
**தினேஷ் ஆட் & சுகுணா**

## துதிக்க

- குதிங்கால் பகுதியிலும், சரீரத்தின் பல்வேறு பகுதியிலும் காணப்பட்ட தீராத வலியிலிருந்து தேவன் கவிதாபென்னை சுகப்படுத்தியிருப்பதற்காக;
- புதிய கிராமங்களில் தேவன் திறந்த வாசலைத் தந்திருப்ப தற்காகவும், புதிதாக அநேகர் சுவிசேஷத்திற்கு ஆர்வம் காண பிப்பதற்காகவும்;

## ஜெபிக்க

- நீண்ட நாட்களாக குழந்தை பாக்கியத்திற்காக காத்திருக்கும் சமிலா பென்னுக்கு தேவன் குழந்தை பாக்கியம் கட்டளை யிட்டு ஆசீர்வதிக்க;
- ஊழியம் வளர காணப்படும் சிறு சிறு தடைகள் நீங்கி, தாண்டி ஓப்ரியில் நல்ல ஆத்துமாக்களை தேவன் கட்டளையிட;

---

**நாள் 18**

மட்ரி, உதய்பூர்
மாவட்டம்
**மோகன்லால் & பிரேமா**

## துதிக்க

- இரண்டு கிராமங்களில் புதிதாக திறந்த வாசலை தேவன் கட்டளையிட்டிருப்பதற்காக;
- பிசாசின் பிடியிலிருந்த சகோதரி சுசிலாவிற்காக ஊழியரும், விசுவாசிகளும் ஜெபித்தபோது தேவன் அவருக்குக் கொடுத்த விடுதலைக்காக;

## ஜெபிக்க

- பிஜ்லி கிராமத்தில் நடைபெறும் ஆலய கட்டுமானப்பணி சரியான நேரத்திற்கு நிறைவேற்றப்பட்டு, தேவ நாம மகிமைக் கென்று பிரதிஷ்டை செய்யப்பட;
- மூலைப் பகுதியில் காணப்படும் கட்டியிலிருந்து சகோதரன் பத்ரஷுக்கு தேவன் பரிபூரண விடுதலை கொடுக்க;




**CSI கிறிஸ்து சபை, ஏசுடியான் தெரு, நாகர்கோவில்**

**19.1.2025** (ஞாயிற்றுக்கிழமை)
காலை 8.00 மணி ஆராதனையில்

**இரு வட இந்திய மிஷனரிகள் பிரதிஷ்டை செய்யப்படவிருக்கின்றனர். தொடர்பு: 97885 85848**

**ஜெபிக்கவும், பங்குபெறவும் அன்புடன் அழைக்கிறோம்**

# மத்தியப் பிரதேசம்

**நாள் 19**

ஜுல்வானியா,
பர்வானி மாவட்டம்
கரீஷ் கர்டே &
சின்டுபாய்

## துதிக்க

- ✪ தேவன் ஜெபத்தைக் கேட்டு விசுவாசி மோகனுக்கு தேவன் நல்ல ஒரு வாகனத்தைக் கொடுத்து ஆசீர்வதித்திருப்பதற்காக;
- ✪ சுரானி கிராமத்தில் புதிதாக அநேகர் கிறிஸ்துவின் நற்செய்திக்கு தங்கள் வாழ்வை அர்ப்பணித்திருப்பதற்காக;

## ஜெபிக்க

- ✶ ஜுல்வானியா கிராமத்தில் கட்டப்பட்டுவருகிற ஆலயப்பணிகள் குறித்த நாளில் முடிவடைந்து தேவ நாம மகிமைக்கென்று பிரதிஷ்டை செய்யப்பட;
- ✶ சர்தார் கிராமத்தில் ஒரு ஆலயம் கட்டப்படவும், கிராமத்து விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தில் ஊன்றக் கட்டப்படவும்;

---

**நாள் 20**

பஹுவான்புரா,
கர்கோன் மாவட்டம்
கிஷோர் ஜாம்ரே &
இன்சாபாய்

## துதிக்க

- ✪ ஆகாஷ் என்ற ஒன்பது வயது சிறுவனுக்கு தொடர் ஜுரத்திலிருந்து தேவன் விடுவித்ததற்காக;
- ✪ ஒருசில கிராமங்களில் சுவிசேஷத்திற்கு திறந்தவாசல் காணப்படுவதோடு அநேகர் சுவிசேஷத்தைக் கேட்க ஆர்வமாய் இருப்பதற்காகவும்;

## ஜெபிக்க

- ✶ 13 வயதாகும் ஆராதனாவுக்கு மூக்குப் பகுதியிலிருந்து வடிந்துகொண்டே இருக்கும் இரத்தக் கசிவை தேவன் நிரந்தரமாக நிறுத்தும்படி;
- ✶ கற்பப் பையையும், பெரிய கட்டியையும் அகற்றியிருக்கும் சங்கீதா பெனுக்கு தேவன் விரைவான சுகத்தை தரும்படி;

---

**நாள் 21**

புல்வானியா, கர்கோன்
மாவட்டம்
ராகுல் ஜாம்ரே &
சஞ்சனா

## துதிக்க

- ✪ பேறுகாலத்தின்போது பல்வேறு கடினமான சூழ்நிலையைக் கடந்துசென்ற விசுவாசி பார்சிங்கின் மனைவிக்கு தேவன் உதவிசெய்ததினால், தாயும் சேயும் நலமாய் உள்ளனர்.
- ✪ விபச்சார தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஜோம்ரியை தேவன் தொட்டு, தன் அன்பின் கயிற்றினால் கட்டி இழுத்து தம் பிள்ளையாய் மாற்ற;

## ஜெபிக்க

- கிறிஸ்துவை விசுவாசிக்கும் கைலாஷ் மற்றும் அவரது மனைவி இருவரும் 100% கிறிஸ்துவை நம்பி தங்கள் வாழ்வை அர்ப்பணிக்க;
- சுவிசேஷத்தைக் கேட்டிருக்கும் 190 பேருடைய இருதயத்திலும் தேவன் கிரியை செய்து இரட்சிப்பைக் கட்டளையிட;

---

நாள் 22

ரஷ்கங்லி, கர்கோன் மாவட்டம்
அனில் ராவத் & சின்ஹா

## துதிக்க

- விசுவாசி பீம் சிங்கை தேவன் பெரிய விபத்திலிருந்து பாதுகாத்து, ஆராதனையில் கலந்துகொள்ள கிருபை செய்ததற்காக;
- உடல் முழுவதும் வலியினால் அவதிப்பட்ட ஹர்சிங் சௌகானுக்காக நமது விசுவாசி ஜெபித்தபோது தேவன் பரிபூரண சுகத்தைக் கொடுத்ததற்காக;

## ஜெபிக்க

- ரஷ்கங்லி பணித்தள வாராந்திர ஜெபக்கூடுகையில் அநேகர் கலந்துகொண்டு விசுவாசத்தில் வளர்வதோடு, சாடசியுள்ள வாழ்க்கை வாழ;
- கிறிஸ்தவத்திற்கு எதிர்ப்பு அதிகமாய் உள்ளதால், விசுவாசிகள் ஆராதனைக்கு வரும்போதும் போகும்போதும் பாதுகாப்பாய் இருக்க;

## குழந்தைகளின் நேசன் இயேசு

மௌகர்கான் கிராமத்தைச் சேர்ந்த இரண்டு வயது சிறுவன் பால் சிசோடியா திடீரென கடும் ஜுரத்தினாலும், சரீரம் முழுவதும் வலியினாலும் துடித்தான். 15 நாட்கள் தொடர்ந்த இந்நிலை அவனை மிகவும் பெலவீனமாக்கியது. எங்களிடம் ஜெபிக்கும்படி கேட்டனர். ஜெபித்தோம். பின் ஞாயிறு ஆராதனையில் கலந்துகொண்டு ஜெபித்ததில் சிறிது முன்னேற்றத்தை உணர்ந்தனர். அடுத்த வாரம் ஞாயிறு ஆராதனையில் கலந்துகொண்டபோது நல்ல முன்னேற்றத்தை காணமுடிந்தது. பூரண சுகத்திற்காக ஜெபிப்போம். தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. – பஹவான்புரா, மத்தியப் பிரதேசம்

## துதிக்க

நாள் 23

பகவான்புரா,
கர்கோன் மாவட்டம்
ஆசிஷ் சிசோடியா
& ஆர்த்தி

- 63 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதில் 2 புதிய நபர்கள் கிறிஸ்துவின் விசுவாசத்திற்குள் வந்திருப்பதற்காக;
- காப்ரி கிராமத்தில் ஆலயம் கட்டுவதற்கு நீண்டநாட்களாக உள்ள தடை நீங்கி, கிராம தலைவரின் ஒப்புதல் கையெழுத் தானதற்காக;

## ஜெபிக்க

- கைருபாய்க்கு இருக்கும் தீராத மூட்டு வலியிலிருந்து தேவன் சுகத்தைக் கொடுத்து, விசுவாசத்தில் பெலப்படச் செய்ய;
- அனுமதி கிடைத்திருக்கம் காப்ரி கிராமத்து ஆலயம் கட்டுவதற்கு விசுவாசிகள் ஒன்றினைந்து நின்று விரைவில் கட்டிமுடிக்க;

---

# குஜராத்

## துதிக்க

நாள் 24

ஜாம்புடி,
தாகோத் மாவட்டம்
மெகுல் கட்டாரா
& சகினா பென்

- பிசாசின் பிடியிலிருந்து ரஞ்சன் பென்னையும், பக்கவாத நோயிலிருந்து பூமிகாவும் விடுதலை பெற்றதற்காக;
- பங்கி பென்னுக்கு வயிற்றுப் பகுதியில் காணப்பட்ட பெரிய கட்டி ஜெபத்தினால் பூரணமாய் மறைந்ததற்காக;

## ஜெபிக்க

- மஞ்சல்காமாலை நோயினால் அதிகமாக கஷ்டப்படும் கிஷானை தேவன் சுகப்படுத்தி விசுவாசத்தை உறுதிப்படுத்தும்படி;
- சுவிசேஷத்தை ஆர்வமாய் கேட்டிருக்கும் சகோதரர்கள் கிஷாரியும், தினேஷ்பாயும் கிறிஸ்துவின் அன்பை அறிந்து ஏற்றுக்கொள்ள;

---

## துதிக்க

நாள் 25

கென்பூர்,
மஹிசாகர் மாவட்டம்
சாவ்சிங்பாய் &
லலிதாபென்

- பத்து வருடங்களாக காணப்பட்ட சர்க்கரை வியாதியிலிருந்து விசுவாசிகளின் ஜெபம் சகோதரி சிட்டாவை சுகப்படுத்தியிருப் பதற்காக;
- பிசாசின் கோரப் பிடியிலிருந்து ஜம்லி பென்னையும், விபுல் பென்னையும் தேவன் பரிபூரணமாய் விடுவித்திருப்பதற் காக;

## ஜெபிக்க

- பக்கவாத நோயினால் சுனிலையும், புற்றுநோயினால் அவதி யுறும் பங்கஜ் பாயையும் தேவன் சுகப்படுத்தும்படியாக;
- கலசிங் நினாமாவின் புற்று நோய் சுகமாகவும், அதனால் அவரது முழுக் குடும்பமும் தேவனின் அன்பை கண்டு உணர்ந்துகொள்ளவும்;

## பூஜாவை முன்குறித்த தேவன்

புக்சோரா கிராமத்திலுள்ள நமது விசுவாசி ஜெகதீஷ் வீட்டில் நடைபெற்ற ஜெபக் கூடுகையில் எதிர்பாராத விதமாக பூஜாவும் கலந்துகொண்டார். நமது மிஷனரி ராஜீவ் இயேசு கிறிஸ்துவின் அன்பையும், இரட்சிப்பையும் குறித்து விளக்கமாக எடுத்துக் கூறினார். இதைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த பூஜாவின் உள்ளத்தில் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்ய ஆரம்பித்தார். ஜெபக்கூடுகையில் தொடர்ந்து பங்கெடுத்தார். அவரது வாழ்க்கை மாற ஆரம்பித்தது. கிறிஸ்துவின் அன்பை சுவைக்க ஆரம்பித்தார். தன் வாழ்வை முற்றிலுமாய் இயேசுவுக்கு அர்ப்பணித்தார். ஆனால், அவருக்கு ஒரு ஆசை, “என் சகோதரனும், என் குடும்பத்தினரும் இந்த இயேசுவின் அன்பை ஏற்றுக்கொள்ளவேண்டும்” என்பதுதான். . – கதர்பூர், உத்தரகாண்ட்

**நாள் 26**

காட், அரவல்லி மாவட்டம்
மெல்வின் கிறிஸ்டியான் & மீனாக்ஷி

## துதிக்க

- டரல் நரன் கடுமையான வயிற்று வலியின் காரணமாய் மருத்துவரை சந்தித்தும் பயனில்லாதபோது, விசுவாசிகள் இணைந்து ஜெபித்த ஜெபம் சுகத்தைப் பெற்றுத்தந்ததற்காக;
- வக்டிம்பு கிராமத்து விசுவாசிகள் ஏழு பேர் கிறிஸ்துவின் மேலுள்ள தங்கள் விசுவாசத்தை திருமுழுக்கின் மூலம் அறிக்கையிட்டிருப்பதற்காக;

## ஜெபிக்க

- வக்டிம்பு கிராமத்தில் வாராந்திர ஜெபக்கூடுகைகள் வளர்ச்சி யடையவும், விசுவாசிகள் ஆசீர்வதிக்கப்படவும்;
- பலிசோடா கிராமத்தில் விசுவாசத்திலிருந்து விலகிச் சென்றி ருக்கும் மூன்று குடும்பத்தினரும், திரும்பவும் ஆலயத்திற்கு ஒழுங்காக வரவும், ஆராதிக்கவும்;

# பீஹார்

## துதிக்க

நாள் 27

பர்ஹரா கோத்தி,
பூர்னியா மாவட்டம்
சுரேந்தர குமார் &
அக்னா

- ✪ செக்லேஷ்வர் சர்மாவை தேவன் பிசாசின் கோரப் பிடியிலிருந்து விடுவித்து அவருக்கும் அவரது குடும்பத்தி னருக்கும் நம்பிக்கை கொடுத்திருப்பதற்காக;
- ✪ 39 பேருக்கு கிறிஸ்துவின் அன்பு பகிர்ந்தளிக்கப்பட்டதில் சுவிசேஷத்தை ஆசையாய் கேட்ட ஒருசிலர் ஆர்வம் காட்டி வருவதற்காக;

## ஜெபிக்க

- ✶ ஞாயிறு ஆராதனை, உபவாச ஜெபம், வேதபாட வகுப்புகள், பெண்கள் கூடுகை போன்றவற்றில் கலந்துகொண்டவர்கள் விசுவாசத்தில் வளரவும், தங்கள் சாட்சியுள்ள வாழ்வின் மூலம் அநேகரை கிறிஸ்துவின் பக்கம் இழுக்கவும்;
- ✶ குடிப்பழக்கத்திற்கு அடிமையாகியிருக்கும் வினோத் கெம்ரன் சுவிசேஷத்தை கேட்டிருக்கிறார். தேவன் அவரை புது மனிதனாக மாற்ற;

---

## துதிக்க

நாள் 28

அரரியா,
அரரியா மாவட்டம்
அமர்குமார் &
சுனித்தா குமார்

- ✪ கடந்த மாதத்தில் தனித்தனியாக 35 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதில் நான்கு பேர் விசுவாசத்திற்குள் வந்தி ருப்பதற்காக;
- ✪ கிராமங்கள்தோறும் எதிர்ப்பு பெருகிவந்தாலும் தேவன் எங்களையும் விசுவாசிகளையும் கண்மணிபோல காத்து வழிநடத்தி வருவதற்காக;

## ஜெபிக்க

- ✶ புதிதாக சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல திட்டமிடப்பட்டிருக் கும் கொஸ்கபூரில் தேவன் திறந்தவாசலை கட்டளையிட்டு, புதிய ஜெபக்குழு உருவாக;
- ✶ மாலை நேரங்களில் நடைபெற்றுவரும் சிறுவர்களுக்கான கல்வி பயிற்சி மையத்தில் தேவன் கிரியை செய்து, சிறுவர் களின் பெற்றோர்கள் கிறிஸ்துவின் அன்பை அறிந்து கொள்ள;

# ஒடிசா

## துதிக்க

நாள் 29

சுக்குடுபாஜூ, ராயகடா மாவட்டம்
அமித் பஸ்கா & கீதாஞ்சலி

- திருமுழுக்கின் வழியாக கிறிஸ்துவின் மந்தையில் இணைந்திருக்கும் 23 பேருக்காகவும், அவர்களது குடும்பத்தினருக்காகவும்;
- ஜுபா கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதில் அநேகர் ஆர்வம் காட்டுகின்றனர். குறிப்பாக குபா மஜ்கி குடும்பத்தினர் விசுவாசத்திற்குள் வர ஆயத்தமாயிருபதற்காக;

## ஜெபிக்க

- இருசக்கர வாகனத்திலிருந்து கீழே விழுந்ததில் பலத்த காயம் அடைந்திருக்கும் டுனாவுக்கு தேவன் நல்ல சுகத்தைத் தர;
- விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் மன்டகினி போன்ற அனைத்து விசுவாசிகளுக்கும் தேவன் நல்ல செழிப்பான அறுவடையைக் கட்டளையிட;

---

## துதிக்க

நாள் 30

உபர் பண்டகுடா, ராயகுடி மாவட்டம்
எஸ்போ ஜகரங்கா & ராஜன்டி

- கடுமையான குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி இருந்த ராஜேந்திராவை தேவன் விடுவித்து குடும்பத்தினருக்கு பிரயோஜனமாய் மாற்றியிருப்பதற்காக;
- கடுமையான உடல் வலியிலிருந்து படேகாவையும், பஞ்சாவையும் தேவன் விடுவித்து குடும்பத்தினரை மகிழ்ச்சியாக்கியிருப்பதனால் குடும்பமாய் கிறிஸ்துவின் அனபை மேலும் அறிய ஆர்வம் காட்டுகிறபடியினால்;

## ஜெபிக்க

- ரீட்டாவிற்கு அடிக்கடி வரும் இருதய வலியிருந்து தேவன் சுகப்படுத்தி, தேவன்மேல் அசைக்கமுடியாத நம்பிக்கையைத் தர
- விசுவாசிகளின் குடும்பத்தினர்கள் மத்தியில் காணப்படும் குடிப்பழக்கத்திலிருந்து தேவன் விடுவித்து குடும்பத்தினரை மகிழ்விக்க;

# கர்நாடகா

நாள் 31

பாகேப்பள்ளி, சிக்கபல்லாபூர் மாவட்டம்
சத்தியப்பா & சியாமலாபாய்

## துதிக்க

- மலக்கவரிப்பள்ளி தாண்டாவில் நடத்தப்பட்ட சிறுவர் தின கொண்டாட்டத்தில் சிறுவர் தினத்தை பற்றியும், நல்ல பண்புகள் பற்றியும் பகிர்ந்துகொள்ளப்பட்டதற்காக;
- தலைவலி, காய்ச்சல் மற்றும் வயிற்று வலியால் அவதிப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ஷைனி இவாஞ்சலின் இப்போது குணமடைந்துள்ளார்.

## ஜெபிக்க

- பாகேபள்ளியில் சிறிய இடத்தில் ஆராதனை தொடர்ந்து நடத்தப்படுவதற்காக, பங்குபெறும் விசுவாசிகளுக்காக;
- பஞ்சாரா இன மக்களிடையே உள்ள தடைகள் நீங்கவும், அனுமதியின்றி அவர்களது கிராமங்களுக்குள் சுவிசேஷத்தை எடுத்துச்செல்ல முடியாது என்ற நிலை மாறவும்;
- சக்கவேல் என்னும் இடத்தில் ஆலயம் கட்டுவதற்காக நிலம் சீக்கிரம் பதிவு செய்யப்படவும், சம்மந்தப்பட்ட அலுவலர்களின் அனுமதியோடு கட்டுமானப் பணி துவங்கவும்;


## முன்னேற்றப்பணி ஊழியர்கள்

| | | | |
|---|---|---|---|
| கன்னியாகுமரி | 97885 85848 | ஈரோடு | 72505 14517 |
| தூத்துக்குடி | 88709 82276 | தாம்பரம் | 6382 286 197 |
| சிவகாசி | 96009 03157 | சென்னை | 90878 08181 |

BHIM UPI

A/c Name : **CHRIST FOR ALL MINISTRIES - INDIA**

| | |
|---|---|
| Bank Name : **ICICI BANK** | Bank Name : **STATE BANK OF INDIA** |
| A/c. No : **000901126766** | A/c No : **35903764348** |
| Type of A/c : **Savings Account** | Type of A/c : **Current Account** |
| Branch : **Ayanavaram, Chennai** | Branch : **Ayanavaram, Chennai** |
| IFS Code : **ICIC0001686** | IFS Code : **SBIN0002202** |

**Our Address: Christ for All Ministries - India**
18/6, Narayanan Street, Ayanavaram, Chennai - 600 023 Cell: 91-94443 96201 | 89036 57933

# அனைவருக்கும் கிறிஸ்து ஊழியங்கள்

அன்பர் இயேசுவை அறியாதோருக்கு அறிவிக்கும் அதி உன்னத பணி!

## உதயம்

இயேசு கிறிஸ்துவின் இறுதிக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நற்செய்தியைக் கேள்விப்படாத இந்திய ஜனத்திரளுக்கு இயேசுவின் அன்பினைப் பகிர்ந்து, திருச்சபையை நாட்டும் பணிக்கு தூய ஆவியானவரால் உருவாக்கப்பட்ட இவ்வியக்கம், ஒரு மிஷனெரி அறக்கட்டளையாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த சுதேச சுவிசேஷ இயக்கம் சபை பாகுபாடின்றி அனைத்துச் சபைகளோடும் கரம் கோர்த்து பணிசெய்யத் தன்னை அர்ப்பணித்திருக்கிறது. நற்செய்தியை ஏற்றுக்கொள்வோரை சீடத்துவ வாழ்வில் நிலைப்படுத்தி, திருச்சபையாக அவர்களை ஒருங்கிணைத்து, அத்தியாவசிய சமுதாய நலப்பணிகள் மூலம் மறுமலர்ச்சி கண்ட சமுதாயத்தை தனது தரிசனமாக்கிச் செயல்படுகிறது.

### நோக்கம்

கிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திக்கப்படாத கடைசி இந்தியனையும் சந்தித்து சீடராக்குவது.

### முக்கியத்துவம்

ஜெபம், அர்ப்பணம், எளிய வாழ்வு, கூட்டுறவு, துணை வலிமை கொடுத்தல்

### அறுவடைப் பணிகள்

சுவிசேஷ பிரகடனம், சீடத்துவத்தை நிலைப்படுத்துவது, திருச்சபைகளை ஸ்தாபிப்பது, சீடர்களின் திறமைகளை வளர்ப்பது, சுதேச தலைமைத்துவத்தைக் கட்டுவது, சமுதாய மறுமலர்ச்சிக்கு வித்திடுவது.

### அனுப்புவோரின் பங்கு

பாரதத்தை கிறிஸ்துவுக்குச் சொந்தமாக்கும் இப்புனித பயணத்தில் உங்களுக்கு தேவன் தந்திருக்கும் உன்னத பங்கினை அனைவருக்கும் கிறிஸ்து ஊழியங்களின் மூலம் நிறைவேற்ற உங்களை வருந்தி அழைக்கிறோம்.

### விண்ணப்ப ஊழியம்

களப்பணியாளர்களுக்காகத் தனியாகவும், குடும்பமாகவும், குழுவாகவும் ஜெபியுங்கள்.

### மக்கதோனியரின் மாண்பு

- ☑ பணித்தளப் பணியாளர்களை மாதம் ரூ.4,000/- கொடுத்துத் தத்தெடுத்துத் தாங்குங்கள்
- ☑ சமுதாய மறுமலர்ச்சிப் பணிகளுக்கு பிரதி மாதம் ரூ.1,200/- கொடுத்து ஆதரியுங்கள்
- ☑ உயர்ந்த இலட்சியத்துடன் செயல்படும் இவ்வியக்கத்தின் தேவைக்கு பிரதி மாதம் உங்களால் இயன்ற காணிக்கை தந்து உதவுங்கள்.

### தாலந்துகள் சமர்ப்பணம்

- ☑ இயக்கத்தின் வளர்ச்சிப் பணிகளுக்காக உங்கள் பகுதியின் ஒருங்கிணைப்பாளராக பொறுப்பேற்றுச் செயல்படுங்கள்.
- ☑ இசை, ஆலோசனை, ஆத்தும ஆதாயம், முதலிய தாலந்துகளை பொது நலனுக்காக முதலீடு செய்யுங்கள்.

**இயேசுவை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுதுகொள்வார்கள்? அவரைக் குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள். ரோமர் 10:14-15**

## ஆண்டவர் ஆலயங்கள் தந்தார் அகமகிழ்வோம்!
## கட்டிக்கொடுத்த குடும்பங்கள் தழைத்திட ஜெபிப்போம்!!
## அனைத்து மக்கள் கூட்டங்களும் பெற்றிட உழைப்போம்!!!




**சல்தரி,** ராஜஸ்தான் **10.11.2024**





**ஹட்மத்,** குஜராத் **12.11.2024**




**சக்சிக்கந்தர்,** பஞ்சாப் **20.10.2024**

**CHRIST FOR ALL MINISTRIES - India (Benash School Campus),**
18/6, Narayana Street, Ayanavaram, Chennai - 600 023
Cell: 91-8903657933 | Email: camindiachennai@gmail.com | www.cam-india.org

| | | |
|---|---|---|
| திரு. விசுவாசம் நன்னன்<br>தலைவர் | மறைதிரு. இரா. ஜான் கிருபாகரன்<br>உப தலைவர்<br>9444396201 | மறைதிரு.. R.T. ஜெயப்பால்<br>நிர்வாக இயக்குநர்<br>8903657933 |
| திரு. S. பால் ஜெயசிங்<br>ஒருங்கிணைப்பாளர் | டாக்டர் J. டேனியல்<br>செயலர் | திரு. N. ஆபிரகாம் ஐசக் ராஜ்<br>நிதிக்காவலர் |